பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/-

தரமான
✶ சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின்
சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஞூ புரட்டாதி மீ 02 ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 6 (18 - 09 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 186

இரண்டு முன் நிபந்தனைகளுடன்

# பேச்சுக்கு வருமாறு புலிகளுக்கு இந்திய அரசு நேற்று அழைப்பு

## யாழ்ப்பாணத்தில் வைத்து தூதுவர் டிக்ஸிற் அறிவிப்பு

— அலுவலகப் பிரதிநிதி : ந. வித்தியாதரன் —

யாழ்ப்பாணம், செப்டம்பர் 18

முன் நிபந்தனையுடன் கூடிய பேச்சுவார்த்தை ஒன்றுக்கு வருமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு இந்தியா பகிரங்க அழைப்பு விடுத்திருக்கிறது.

நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து இலங்கைக்கான இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் இந்த அழைப்பை விடுத்தார்.

★ இலங்கை — இந்திய ஒப்பந்தம், அதிகாரப் பகிர்விற்கான இணக்கம் ஆகியவை குறித்தும் மீள ஆராய்தல் என்ற வகையிலோ —

முன்னர் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி விடுதலைப் புலிகளிடம் கூறியவை; விடுதலைப் புலிகள் ராஜீவ்காந்திபிடம் கூறியவை என்ற தொனியில் பழைய விடயங்களைப் பற்றியோ —

உத்தேசப் பேச்சுவார்த்தையில் எதுவும் பிரஸ்தாபிக்கக் கூடாது.

★ இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை ஏற்று அதற்கமைய ஆயுதங்களை ஒப்படைப்பது குறித்தும் —

ஜனநாயக ரீதியிலான அரசியல் நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் நியாயமான முறையில் பங்குபற்றுவது குறித்தும் மட்டும் இந்தப் பேச்சுவார்த்தையில் ஆலோசிக்கலாம்.

இந்த இரண்டு முன் நிபந்தனைகளுடன் கூடிய பேச்சுவார்த்தைக்கே இந்தியத் தரப்பு தற்போது அழைப்பு விடுத்திருக்கிறது.

இந்த அழைப்பை விடுதலைப் புலிகள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டால் அவர்களின் தலைமைப்பீடத்துடன். இந்திய அரசுப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என திரு. டிக்ஸிற் தெரிவித்தார்.

நேற்றுக் காலை இந்திய அமைதிப்படையின் யாழ் நகரக் கொமாண்டர் அலுவலகத்தில் வைத்து பிரசைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக் குழுப் பிரதிநிதிகளையும் அன்னையர் முன்னணிப் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்துப் பேசினார்.

அந்தச் சந்திப்பின் போதே பேச்சுவார்த்தைக்கான பகிரங்க அழைப்பை அவர் விடுத்தார்.

அவர் அங்கு கூறியதாவது;

ஈழத்தமிழர்களின் அபிலாஷைகளில் பெரும் பகுதி பூர்த்தியாக்கப் (8 ஆம் பக்கம் பார்க்க)



இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற், நேற்று யாழ்ப்பாணம் வந்து யாழ் நகர அமைதிப்படை கொமாண்டர் அலுவலகத்தில் பிரசைகள் குழு ஒன்றிணைப்புக் குழு பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடத்தியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

மேற் படத்தில் – திரு. டிக்ஸிற்றும் இரு மருங்கிலும் அமைதிப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஏ. எஸ். கல்கத் (இடது) யாழ் நகரக் கொமாண்டர் பிரிகேடியர் ஆர். ஐ. எஸ். காலோன் (வலது) மற்றும் அதிகாரிகளும்–

கீழே உள்ள படத்தில் – பிரசைகள் குழு, அன்னையர் முன்னணி பிரதிநிதிகளையும் காணலாம்; படங்கள்: ஜெயம் (ஒ)

## புலிகள் — அமைதிப்படை சந்திப்பு வவுனியாவில் ?

யாழ்ப்பாணம், செப். 18

இந்திய அமைதிப்படை அதிகாரிகளுக்கும்-விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்புக்கள் வவுனியாவில் நடைபெறலாம் என நம்பப்படுகிறது.

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த இந்தியத் தூதுவர் திரு ஜே என். டிக்ஸிற் நாள் முழுவதும் மக்கள் பிரதிநிதிகள், பிரமுகர்களைச் சந்தித்து அவர்களின் கருத்தை அறிவதிலும் தமது நிலைப்பாட்டைத் தெரிவிப்பதிலுமே ஈடுபட்டிருந்தார்.

முற்பகலில் யாழ் பிரசைகள் குழுக்கள் ஒன்றிணைப்புக்குழுப் பிரதிநிதிகளைச் சந்தித்தார்.

அதன் பின்னர் ஈரோஸ் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன், யாழ் மாநகராளுமன்ற ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் மற்றும் பிரமுகர்களைச் சந்தித்தார்.

நேற்று நண்பகலில் (8 ஆம் பக்கம் பார்க்க)

தூதுவரிடம் ஆணையாளர் சொன்னது:

## முதலில் பேச்சுவார்த்தை பின்பே ஆயுதக் கையளிப்பு

யாழ்ப்பாணம், செப். 18

யுத்தநிறுத்தம்-பேச்சுவார்த்தை; அதன் பின்பே ஆயுதக் கையளிப்பு தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற்றை நேற்று சந்தித்த யாழ். மாநகராளுமன்ற ஆணையாளர் திரு. சி. வீ. கே, சிவஞானம் இவ்வாறு தெரிவித்தார் என அறியவந்தது.

யுத்த நிறுத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்.

அதன் பின்பே விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைப் பெறுவது குறித்துச் சிந்திக்க வேண்டும் என அவர் இந்தியத் தூதுவரிடம் தெரிவித்தாராம். (ஒ-10)

## கால அவகாசத்தை நீடிக்குக - ஈரோஸ்

யாழ்ப்பாணம், செப் 18

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அமைதிப் படையினர் இப்போது அறிவித்திருக்கும் யுத்த நிறுத்தக் கால அவகாசம் போதாது; இது நீடிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு நேற்று இந்தியத் தூதுவர் திரு. டிக்ஸிற்றிடம் ஈரோஸ் பிரமுகர் திரு. பாலகுமாரன் தெரிவித்தார்

போர் நிறுத்தம் அமுல் படுத்தப்படும் இந்தக் குறைந்த காலத்தில் பிரச்சினைகளைக் (8 ஆம் பக்கம் பார்க்க)

இம்மாதம் 7ஆம் திகதி

## இந்தியத் தரப்பிலிருந்து பிரபாவுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், செப். 18

யுத்த நிறுத்தம் குறித்து கடந்த 15ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிப்பதற்கு முன்னரே, அதற்கான சூழ்நிலை உருவாகி வருவதாகவும், வடக்கு-கிழக்கு இணைப்பு, அரசியற் கைதிகள் விடுதலை என்பன நடக்கும் என்றவாறு பல தகவல்களை இந்தியத் தரப்பினர் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்குத் தெரியப்படுத்தியதாக அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக தமது செய்தி ஒன்று கடந்த 4ஆம் திகதி பிரபாகரனுக்கு அனுப்பப்பட்டதாகவும் —

அது அவருக்குக் கிடைத்ததாக தமக்கு ஊர்ஜிதம் செய்யப்பட்டதாகவும் இந்தியத்தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் நேற்றுத் தெரிவித்தார்.

அந்தக் கடிதத்தின் முழு விவரங்களையும் (8 ஆம் பக்கம் பார்க்க)

டிக்ஸிற் சொன்னது:

## பொறுப்பான பதில் கிடைத்தால் புலிகள் உறுப்பினரும் விடுவிக்கப்படுவர்

யாழ்ப்பாணம், செப். 18

இந்தியத் தரப்பின் யுத்த நிறுத்த அறிவிப்புக்கு விடுதலைப் புலிகள் தரப்பில் பொறுப்புள்ள சாதகமானபதில்கிடைக்குமாயின்–

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

—இந்தியத் தூதர், திரு. ஜே. என் டிக்ஸிற் நேற்று யாழ்ப் பாணத்தில் நடைபெற்ற சந்திப்பின்போது இத்தகவலை வெளியிட்டார். (அ-உ-10)

புலிகளின் பதிலைப் பொறுத்து

## யுத்த நிறுத்தத்தை நீடிக்க சிபார்சு செய்வதற்கு இணக்கம்

யாழ்ப்பாணம் செப் 18

இந்தியத் தரப்பினரின் யுத்த நிறுத்த அறிவிப்புத் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் பதிலை நேற்று மாலை தாங்கள் எதிர்பார்த்திருந்ததாக இந்தியத் தூதர் திரு. ஜே என். டிக்ஸிற் தெரிவித்தார்.

இந்தப் பதில் ஆக்கபூர்வமானதாக இருந்தால் யுத்த நிறுத்தம் மேலும் ஒருவாரகாலத்துக்கு நீடிக்கப்படுவதற்கு வாய்ப்புண்டாகும் என்று அவர் சொன்னார்.

யாழ் நகரக் கொமாண்டர் அலுவலகத்தில் வைத்து இந்தியத் தூதரை நேற்றுச் சந்தித்த பிரசைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக் குழு பிரதிநிதிகள் யுத்த நிறுத்தத்தை மேலும் நீடிக்க வேண்டும் என வற்புறுத்தினர்.

இது தொடர்பாக பதிலளித்த இந்தியத் தூதர் —

"காலவரையறையற்ற யுத்த நிறுத்தத்திற்கு இந்தியா தயாரில்லை. எவ்வளவு காலத்துக்கு யுத்த நிறுத்தம் நீடிக்கப்பட வேண்டும் என்பதை ஒரு கால எல்லை குறிப்பிட்டுக் கோரிக்கை விடுக்கலாம் என்றார்.

இதேவேளையுத்தநிறுத்த நீடிப்பு. யுத்த நிறுத்தம் (8 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாணசபைத் தேர்தல் அறிவிப்பு நாளை வெளிவரலாம்

யாழ்ப்பாணம், செப் 18

வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் குறித்து உத்தியோக பூர்வமான அறிவிப்பு நாளை திங்கட்கிழமை அல்லது அதற்கு மறு நாள் செவ்வாய்க்கிழமை வெளியிடப்படும்,

–இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் இந்தத் தகவலை நேற்று யாழ் நகரில் வெளியிட்டார்.

இந்த அறிவிப்பு வெளியான தினத்திலிருந்து 3 வாரங்களுக்குள் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யக் கூடியதாக, நியமனப் பத்திரம் தாக்கல் செய்வதற்கான தினம் அறிவிக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

விடுதலைப் புலிகளு (8 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்ப பதுளை ஆசிரியர்கள் அதிர்ஷ்டசாலிகள் போலை...!

### பதுளையில்

கொழும்பு, செப் 18

பதுளை மாவட்டத்தில் நாளை திங்கட்கிழமையும் பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப் படுகிறது. (ஒ-எ)

### சுபநேரம்

18 – 09 – 1988

சுபநேரம்:
09 03 முதல் 10.33 வரை
ராகுகாலம்:
04 33 முதல் 06.03 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## கைதான மூவரையும் விடுவிக்கக் கோரி நேற்று முகாம் நோக்கி ஊர்வலம்

வடமராட்சி, செப்.18

அமைதிப்படையினரால் கைதுசெய்யப்பட்ட மூவரையும் விடுவிக்கும்படிகோரி நேற்று பெரும் எண்ணிக்கையான மக்கள் ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

கடந்த மாதம் 14ஆம் திகதி பிரஸ்தாப மூவரும் கைதாகி இருந்தனர்.

அவர்கள் பெயர் விவரம் வருமாறு:-

எஸ். வேலும் மயிலும் (டாக்டர்), சு. கணபதிப்பிள்ளை (ஆசிரியர்), க, செல்லத்தம்பி (ஓய்வு பெற்ற தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்).

அவர்கள் மூவரையும் விடுவிக்கக்கோரி அல்வாயில் இருந்து புறப்பட்ட ஊர்வலம் புலோலி அமைதிப்படை முகாமைச் சென்றடைந்தது.

அங்கு பருத்தித்துறை பிரசைகள் குழுவினர் மூலம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

மகஜரை ஏற்றுக் கொண்ட அமைதிப் படை அதிகாரியான சுகுமார் காங்கேசன்துறை முகாமுடன் தொடர்புகொண்டு மூவரையும் விடுவிப்பதாகக் கூறினார்.

எனினும் அவர்கள் மூவரும நேற்று மாலையில் விடுவிக்கப்பட்டார்களா இல்லையாஎன்பது செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியவரவில்லை. (ஒ- 96)

### பதில் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், செப். 18

இந்திய அரச தரப்பில் இம்மாதம் ஏழாம் திகதி திரு. பிரபாகரனுக்கு அனுப்பப்பட்ட கடிதத்துக்கு நேற்றுக் கிடைக்கும் என எதிர்பார்த்த பதில் நேற்றிரவு வரை கிடைக்கவில்லை. (அ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Sisil R 60 குளிர் சாதனப் பெட்டி நல்ல நிலையில் (புதிது) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: 46/2, மாட்டீன் ரேட், யாழ்ப்பாணம். (6663)

பூவரச மரங்கள் திங்கள் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும். விபரங்கட்கு: சு. யோகசிங்கம், வைரவ கோவிலடி, தலையாளி, கொக்குவில். (6672)

தையல் மெஷின் (எலெக்ரிக்), பாவித்த டபிள், சிங்கிள் கட்டில் மெத்தைகள் மற்றும் சகல தளபாடங்கள், சாப்பாட்டு மேசை, விருந்தைக் கதிரைகள், கண்ணடிமேசை, வீட்டுப்பாவனை Show Case, சிறிய எலக்ரிக் குக்கர், சசற் றேடியோ, குசினிப் பொருள்கள், Baby Cot, Hall Set, Pyrex கிளாஸ் வகைகள், காரியாலய மேசை, Pram, மெஷின் உடன் விற்பனைக்குண்டு. 120, இராசாவின் தோட்டம் ரோட். யாழ்ப்பாணம். கராச் அருகில். (6433)

Lohmann இன சிவப்பு வெள்ளை முட்டையிடும் ஒருநாள் பேட்டுக்குஞ்சும், புறொயிலர்குஞ்சும் மற்றும் சேவல் குஞ்சும் 17-9-88 முதல் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- M. G. M. Forage Stores No. 208, 1st Cross St, Jaffna. (6513)

10 Sri Car Fiat 128 U.K இல் இருந்து வருவிக்கப்பட்டது. விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். 'ஐங்கரம்' 252, யாழ் வீதி, மாவிட்டபுரம். (கணபதிப்பிள்ளை கடைக்கு அருகாமையில்) (6501)

## காணி விற்பனை

பலாலி ரோட்டுக்கும் சுன்னாகம் ரோட்டுக்கும் அண்மித்த இரண்டு பக்க பாதையுள்ள 17½ பரப்பு தோட்டக்காணி ஊரெழு மேற்கில் விற்பனைக்குண்டு. தொழிற்சாலை அமைக்க மிகப் பொருத்தமானது. தொடர்பு திரு. அ. சிவஞானம் ஊரெழு கிழக்கு, சுன்னாகம். (6526)

ராசவீதி இருபாலை கோண்டாவில் வீதிச் சந்திக்கருகாமையில் ஐந்தேகால் நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும் சி. ஆனந்தகுமாரசாமி ''கனகிரி'' விதானை ஒழுங்கை, கோப்பாய் தெற்கு, கோப்பாய். (6527)

கோப்பாய் வடக்கு பூதர்மடத்தடியில் கோப்பாய் வரவேற்கிறது என்ற விளம்பரப் பலகைக்கு கிழக்கு பக்கமாக உள்ள 6 பரப்பு காணியும் ஒருசிறிய வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வ. கனகசபை [கணேசன்], 26, புகையிரத நிலைய வீதி, கொக்குவில். [தினசரி காலை 6 மணிக்கும் 12 மணிக்கும் இடையில்]. (6517)

## திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C124)

## உடன் விற்பனைக்கு

வீடு கட்டுவதற்கான அரிந்த பலகைகள், யாவரணை, முதிரை, வேம்பு, கமண்டலையும், பாலைத் தீராந்திகளும் முதிரைக்கதவு நிலைகளும் — சுண்டிக்குளி 31, கண்டி வீதி, திருமதி சுப்பிரமணியம் (Retired Principal) அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். (6679)

## மலிவு விற்பனை

தம்புரா, வயலின், மிருதங்கம் (தஞ்சாவூர்) ஆகியனவும் கர்நாடக சங்கீதஇசை. கொண்ட கஸட்டுகள் மலிவு விலையில், பக்திப்பாடல்கள், திருமதி மணிமாறன் ஆற்றிய சொற்பொழிவுகள் கொண்ட கஸட்டுகள் ஆகியன உண்டு. அ.அ. ஆனந்தம். 17/4. ஐயனார் கோயில்வீதி. வண். மேற்கு. (6445)

தொழிற்சாலையில் சிறு பழுதடைந்த பாத்திரங்கள் மிக மலிவு விலையில் விற்கப்படும். (காலம் 16-9-88 முதல் 22-9-88 வரை) இடம்: பேள் உலோகத் தொழிற்சாலை, 60 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்.) (6520)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளைசிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர், C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர்லேன், நல்லூர். (6143)

## இறைச்சிக் கோழிகள்

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள்' சேவற் கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு Nallur Farm Centre, C/o Nallur வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (6144)

## தேவை

கொப்பிகள் கட்டுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும் மிக் இன்டஸ்றீஸ். (Mik Industries) 26& 26/1 திருநெல்வேலி (சிவன்) புதுவீதி, யாழ்ப்பாணம். (6681)

ஸ்ரான்லி ரோட்டில் அமைந்திருக்கும் T. V, Radio உதிரிப்பாக விற்பனை ஸ்தாபனத்திற்கு பெண் கணக்காளர் அல்லது காசாளர் தேவை. 25 ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கவும். அனுபவம் உள்ளவருக்கும், முற்பணம் கட்டக்கூடியவருக்கும் முன்னுரிமை வழங்கப்படும். ரேடியோ திருத்துதல் பழகுவதற்கும் 12—17 வயதிற்கும் இடைப்பட்டோர் விண்ணப்பிக்கலாம். Mini Trade Centre, No. 3, J.M.C Building, Jaffna. (6522)

புதிதாக ஆரம்பித்த யாழ் றிக்கோ சுவீற் அன் கிறீம் ஹவுஸ் ஸ்தாபனத்திற்கு புரியாணி தயாரிப்பதில் நன்கு அனுபவமுடையவர்கள் தேவை. நேரில் வரவும். 352, மணிக்கூட்டு வீதி. வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (6683)

## மணமக்கள் தேவையா

எம்மிடம் எல்லாச் சாதி, சமயத்திலும் உத்தியோக முறைகளிலும் ஆண் பெண் யாவரும் இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமையில் நேரே வரலாம். தொடர்பு: மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். யாழ்ப்பாணம். (6654)

## மணமகன் தேவை

இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த 5' 3'' உயரமுள்ள பூச நட்சத்திர ஆங்கில ஆசிரியைக்கு Dr. சகோதரன் 36 வயதுக்கு மேற்பட்ட நல்ல பதவியிலுள்ள மணமகனைத் தேடுகிறார். வீடு வளவுடன் தகுந்த சீதனம் கொடுக்கப்படும். இல. 362 C/o உதயன் யாழ்ப்பாணம். (6502)

## மணமகள் தேவை

யாழ் இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த அவுஸ்ரேலிய பிரஜாவுரிமை பெற்றவரும் M. Sc. பொறியியலாளர் 33 வயதுடைய மணமகனுக்கு பட்டதாரி, கணக்காளர் மணமகள் தேவை. தொடர்பு; ABCD விவாகப் பொருத்துனர், 328, நாவலர் ரோட், ஆனைப்பந்தி. (6524)

யாழ் இந்து உயர் குலத்தைச் சேர்ந்த தனியார் வங்கியில் வேலை பார்க்கும், 28 வயதுடைய அழகுடைய 5' - 4'' உயரமுடைய (7ல் செவ்வாய்) மணமகனுக்குவேலைபார்க்கும் மணமகள் தேவை. சீதனம் பேசித் தீர்மானிக்கலாம். 193, C/o உதயன், யாழ்ப்பாணம். (6670)

## சிறிய கடை தேவை

யாழ் நகர் பகுதி எல்லைக்குள் மணிக்கூடு திருத்துவதற்கு ஏற்ற, ஒருசிறிய கடை தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். No: 366, C/o உதயன், யாழ்ப்பாணம். (6523)

## தவறிவிட்டது

பாவித்த இரண்டு பிலிம்ரோல் (Film Roll) மாவிட்டபுரத்திற்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தெல்லிப்பழை சிங்கர் கொம்பனியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6684)

கனகசபாபதி குகநேசன் என்னும் பெயருடைய J 0259193 இலக்க பாஸ்போட்டும் கொழும்பு— திருச்சி விமான ரிக்கற்றும், கோமதி விலாசிலிருந்து (கொழும்பு) அஜீத், ஜெற்லைன், சேவ்ரி ஆகிய பஸ்களில் ஏதோ ஒன்றில் 10-9-88இல் அனுப்பிய போது தவறிவிட்டது. யார் கைக்கு கிடைத்திருப்பினும் தயவு செய்து யாழ் ஆர்த்தி ஜுவலரியில் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (6525)

## G.C.E. A/L Home Economics

எதிர்வரும் அக்டோபர் மாதம் நடைபெறவுள்ள A/L மனைப் பொருளியல் செயல் முறை பரீட்சைக்கான விளக்க வகுப்புக்களும் Aug 89 மனைப் பொருளியல் பரீட்சைக்கான Theory Classes உம் ஆரம்பம் 19-9-88 பி. ப 3. 00 Kalalayaah, Victoria Road, Jaffna. (C225)

## Spoken English with Grammar

புதிய பிரிவு அரச ஊழியர்களது வசதிக்காக மாலைநேர வகுப்புநேரம்: 4 மணி — 6 மணி செவ்வாய், வியாழன் நாட்களில் மட்டும். ஆரம்பம்: 20 - 6 - 88 S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (6435)

## சேவை

உங்கள் எண்ணம் போல் கண்கவர் நிறங்களில் பற்பல டிசைன்களில் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ரெராசோ புளோரிங் (Terraso Flooring) (மாபிள் நிலம்) அமைத்துக் கொடுக்கப்படும். சதுர அடி 30 — 36 வரை தொடர்பு: N.P. லோகேஸ்வரன், No. 33 மூத்த விநாயகர் 1 ஆம் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர். (6151)

## சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதகபலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி. மங்கள மணவாழ்வு, மனையில் இலட்சுமி கடாட்சம், சத்துருஜெயம், கிரகதோஷம் முதலான மாந்திரீக விடயங்கட்கு நாடுங்கள் ''சக்தி சரவணா'' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடம், மட்டக்களப்பு பாம்பரிய பரம்பரை மந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி, (யாழ்/ இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (6510,

## G. C. E. (O/L) New Syllabus

மேற்படி பரீட்சையில் திறமைச் சித்தி பெற உதவும் 5 மாதிரி வினாத்தாள்களும், விடைகளும் தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் வெளிவந்துள்ளன. ஒவ்வொன்றும் ரூபா 30/- சகல புத்தகசாலைகளிலும்கிடைக்கும். உயர்கல்விப் பதிப்பக வெளியீடுகள் (6651)

## SCIENTIFIC DRESS MAKING

புதிய வகுப்புக்கள் 28-9-88 இல் ஆரம்பம். இலகுவான முறையில் கற்பிக்கப்படும். உடனடியாக தொடர்பு கொள்ளவும்: திருமதி செ. பாலசேகரம், No. 19, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (6447)

## பயிற்சி வகுப்பு

மட்டக்களப்பு செப் 18

அதிபர் தரம் I, II, III ஆகிய போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பம் செய்துள்ள ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்த இ. த. ஆ. சங்கம் மட்டக்களப்பு மாவட்டக் கிளை தீர்மானித்துள்ளது.

அடுத்தமாதம் முதல் வாரம் இவ் வகுப்பு ஆரம்பமாகும். [ச-21]

# ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கிறார் பிரேமா

கொழும்பு, செப் 18

ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டபின்னர்பிரதமர் பிரேமதாச அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அறிக்கையில் அவர் தெரிவித்ததாவது;

ஏகமனதாக என்னை வேட்பாளராகத் தெரிவு செய்ததற்கு ஜனாதிபதிக்கு நான் நன்றி கூறுகிறேன்.

நாட்டின் சுபீட்சத்துக்கு நான் உழைப்பேன்.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படின் நான் கடைப்பிடிக்கப் போகும் கொள்கைகள் பற்றி அக்டோபர் முன் பகுதியில் நடைபெறவிருக்கும் ஐ. தே. க. சிறப்பு மாநாட்டில் வெளியிடுவேன்.

புதிய பிரதமரை தெரிவு செய்வதில் நான் அரசமைப்புக்குட் பட்ட முறையில் செயல்படுவேன்.

நாட்டின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேண நான் என்னை அர்ப்பணிப்பேன்.

நாட்டின் அமைதியை நிலைநாட்டப் பாடுபடுவேன். தாய் நாட்டைக் காப்பாற்றவும் நான் பாடுபடுவேன்.

இப்படிப் பிரதமர் தனது அறிக்கையில் தெரிவித்தார். (ஒ-எ)

## அடிக்கல்

வட்டக்கச்சி, செப் 18

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதி கந்தசாமி கோவில் மாகா மண்டபத்துக்கும் தரிசன மண்டபத்துக்குமான அடிக்கல் நடும் விழா கடந்த 14ஆம் திகதி நடைபெற்றது.

திருப்பணிச் சபைத் தலைவர் திரு இ. பசுபதிப்பிள்ளை அடிக்கல்லை நட்டார். (ச-ரி)

## அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 18

சுன்னாகம் வரியிறுப்பாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சுன்னாகம் ரேமன் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெறும். (இ-9)

## பட்டப்பின் கல்வி டிப்புளோமா 1988/89 அனுமதிப் பரீட்சை

மேற்படி பாடநெறிக்கான அனுமதிப் பரீட்சை 25.9.88 காலை 9.00 மணிக்குப் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும். தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகளுக்குத் தபால்மூலம் அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளது.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
16.09.88
(C/231)

## எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

(1) சிவகுமார் — அமலா
'இல்லம்'

(2) சிறீதர் — சரிதா
'பூப்பூத்த நந்தவனம்'

(3) கங்கா — அஸ்வினி
'காவேரிக் கரையினிலே'

(4) வெங்கடேஸ் — லட்சுமி
'எழுதாத தீர்ப்புகள்'

அடுத்த வெளியீடுகள்:-

(1) சூரசம்ஹாரம்
(2) நல்லவன்
(3) உன்னால் முடியும் தம்பி
(4) நான் தான் ராஜா
(5) ஜீவா
(6) அக்னி நட்சத்திரம்

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

## பின்போடப்பட்டுள்ளது

18-9-88 ஞாயிற்றுக்கிழமை இன்று ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட மதிய போசன விருந்துபசார வைபவம் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் தியாகி திலீபனின் நினைவுக் கொண்டாட்டங்களினால் 30-9-88 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு பின்போடப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

ஹாட்லிக் கல்லூரி
பழைய மாணவர் மன்றம்,
(6675) பருத்தித்துறை.

+
J. M. J.

## உங்கள் பயண அமைப்பாளர்




✶ கனடா ✶ ஜெர்மனி ✶ இத்தாலி
✶ சுவிஸ் ✶ பிரான்ஸ் ✶ அமெரிக்கா

மேற்படி நாடுகளுக்குப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம். ஒவ்வொரு வாரமும் எமது குழுக்கள் இறைவன் நல்லருளுடன் மேற்படி நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு வருகின்றன.

நீங்கள் விரும்பும் நாட்டுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.

எனவே விபரங்களுக்கு உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

1. செல்வம்கொழிக்கும் குவைத் நாட்டில்

ஆஸ்பத்திரி, பாடசாலை மற்றும் பொது அலுவலகங்களில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக CLEANERS ஆகப் பணியாற்றுவதற்கு விரும்புகிறீர்களா?
சம்பளம்: 35 — 40 டினார்கள் குவைத்
உணவு, உறைவிடம் இலவசம்.

2. கனடா, லண்டன், பிரான்ஸ், கிறீஸ், சைப்ரஸ், லெபனான், யோர்தான், சிங்கப்பூர் வீட்டு வேலைப் பணிப்பெண்கள்

ஓரளவு ஆங்கில அறிவுடைய பெண்களுக்கு மேற்படி நாடுகளிலும் கண்ணியமான குடும்பங்களில் வீட்டு வேலை வாய்ப்பு, விசா முதலிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

3. ஐக்கிய அரபு இராச்சியம் அபுதாபியில்

| | | | |
|---|---|---|---|
| 10 ரெயிலர்ஸ் | Tailors | — | 600 திரம் |
| 01 வெட்டுபவர் | Cutter | — | 800 திரம் |
| 01 டிசைனர் | Designer | — | 1000 திரம் |
| 10 பூவேலை | Embroider | — | 800 திரம் |

பெண் தையற்காரர்கள் உடன் தேவை.

4. குவைத், சிங்கப்பூர்
கப்பல் வேலைவாய்ப்புகள்.

5. சவூதி அரேபியா
சவூதி அரேபியாவில் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் CLEANERS
சம்பளம்: 450 SR
ஒவர்டைம், உணவு, இருப்பிடம் இலவசம்,

மற்றும் சகல விபரங்களுக்கும் உடனே தொடர்புகொள்ளும்படி அன்புடன் அழைக்கிறேன்.

உங்கள் பயண அமைப்பாளர்:
S. P. ANTON
No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம். (C 226)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**CEYGMA PUMPS**
**சிக்மா பம்ப்ஸ்**

உங்கள் தேவைகளுக்கேற்ற

மின் மோட்டர்கள்
Electric Motor Pumps

| | | | |
|---|---|---|---|
| ½ HP. | 1'' X 1'' | — | 3500-00 |
| ½ HP. | 1¼'' X 1¼'' | — | 3950-00 |
| 1 HP. | 1½'' X 1¼'' | — | 4750-00 |
| 1 HP. | 2'' X 1½'' | — | 5250-00 |
| 1½ HP. | 2'' X 2'' | — | 5850-00 |

நீர் இறைக்கும் இயந்திரங்கள்
**Engine Pumps**

இந்தியன் விலியர்ஸ் பொருத்தப்பட்டது
**Indian Villiers Mk, 12 7250.00**

குபோடா என்ஜின் பொருத்தப்பட்டது
**Kubota Ks. 160 8250-00**

இப்பொழுது தாராளமாகக் கையிருப்பில் உள்ளன. எமது பம்புகளுக்கு ஒரு வருட உத்தரவாதம் உண்டு. பழுதடைந்த பம்ப்கள் அதிவிரைவில் திருத்தி (Repairs) புனரமைத்துக் கொடுக்கப்படும்.

இவை தவிர உங்கள் தேவைக்கேற்ப விஷேச பம்புகள் மோட்டருடன் இணைத்துக் கொடுக்கப்படும்.

உங்கள் தேவைகளுக்கு தொடர்புகொள்ளுங்கள்.

**UNITED AGRO ENGINEERING**
274/1. ஆஸ்பத்திரி வீதி,
(பெரியாஸ்பத்திரி முன்பாக)
C/216 யாழ்ப்பாணம்.


# குண்டைக் கொத்திய சிறுவர்கள் 2 பேர் பலி!

மட்டக்களப்பு, செப் 18

காத்தான்குடியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் இரு சிறுவர்கள் பலியானார்கள். மற்றுமோர் சிறுவன் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இச்சம்பவம் கடந்த வாரத்தில் பாலமுனை என்னுமிடத்தில் நடைபெற்றது.

இம்மூவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் ஆவர்

இச் சம்பவம் குறித்துக் கூறப்படுவதாவது:-

சம்பவதினம் அப்பகுதியிலுள்ள காட்டுப் பகுதியில் விளையாடச் சென்ற சமயம் பந்துபோன்ற பொருளை சிறுவர்கள் கண்டெடுத்தனர்.

விளையாட்டுப்பொருள் என நினைத்து கோடாரி மூலம் வீட்டில் வைத்து கொத்திய போது அது வெடித்துச்சிதறியது. இரு சிறுவர்களும் அந்தஇடத்திலேயே மரணமானார்கள். ஒரு சிறுவன் காயங்களுக்கு ஆளானான்.

(ஒ-21)

# தேர்தலில் புலிகள்
## பங்குபற்றவே யுத்தநிறுத்தமாம்

லண்டன், செப் 18

மாகாணசபைத் தேர்தலில் பங்கு கொள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு வாய்ப்பொன்றை அளிக்கு முகமாகவே இந்த யுத்த நிறுத்தம் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

இப்படிக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்தது என்று பி. பி. சி. வானொலி அறிவித்தது.

யுத்த நிறுத்தத்தை பயன் படுத்தி அரசியல் கட்சியாக அங்கீகரிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தேர்தல் ஆணையாளரிடம் விண்ணப்பித்துக் கொள்ளும் என்று இந்தியா நம்புவதாக இந்தியத் தூதரகம் யமலும் தெரிவித்தது.

(ஒ-எ )

# பீரங்கிகள் முழங்கின

யாழ்ப்பாணம் செப் 18

யுத்த நிறுத்தம் அமுல் படுத்தப்பட்ட போதிலும் காரைநகர் கடற் பகுதியில் பீரங்கி வேட்டுக்கள் முழங்கின.

இதன் காரணமாக பொது மக்கள் பீதியடைந்தனர்.

கடந்த 15 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை ஆறுமணியளவில் இந்த பீரங்கி வேட்டுக்கள் முழங்கின.

கடல் பகுதியில் வைத்து ஆகாயத்தை நோக்கி இப் பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாக பின்னர் அறியவந்துள்ளது. (ஒ-10)

# பத்மநாபா மீதான வழக்கை
## வாபஸ்பெறக் கோரிச் சுவரொட்டி

தோழர் பத்மநாபா உட்பட 23 பேர் மீது தொடரப்பட்டுள்ள வழக்கை வாபஸ்பெறுக.

மேற்கண்டவாறு மட்டக்களப்பில்ஈ.பி.ஆர்.எல்.எவ். சுவரொட்டி மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

அச்சுவரொட்டியில் கூறப்பட்டுள்ளதாவது:-

★சகல அரசியல் கைதிகளையும் விடுதலைசெய்.

★திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை நிறுத்து.

★தமிழ் மொழியை உத்தியோகமொழியாகப் பிரகடனம் செய்.

( )


**VACANCIES IN SAUDI ARABIA**

1. ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் Hospital Cleaners } 400 SR
2. எயர்போட் கிளீனர்ஸ் Airport Cleaners } 400 + 10)

வயதெல்லை 21 - 49 வரை

இரண்டு வாரத்திற்குள் பிரயாணம் செய்யலாம்.

**T. V. TRAVELS & TOURIST**
Brown Road,
(Railway Station Front)
KOKUVIL.

(C/208)



PERSONAL CLASSES
for
**PHYSICS**
ஆசிரியர்:
**R. சத்தியசீலன்**

**DAY CLASSES**
(திங், செவ், புதன், வியா, வெள்ளி)

Batch I: 9.00 - 10.15 a.m.
Batch II: 1.30 - 2.45 p.m.

**ஆரம்பம்: 19-09-1988**
திங்கள்; 9.00 a.m.
(முழுப் பாடத் திட்டமும் முடித்துக் கொடுக்கப்படும்.)

குறிப்பு: A/L 89, A/L 90 சனி, ஞாயிறு வகுப்புக்கள் நடைபெறுகின்றன

இல. 21, மணல்தரை லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(C 212)



**I. D. P. M**
DEC. 88
(REVISION CLASSES)

CONTACT:
**42/2, TEMPLE ROAD JAFFNA**

(6667)



கற்பகதருவாக இயற்கை தந்த பனை வளத்தை நம்பியுள்ள எம்மக்களே!

உங்கள் பனம் உற்பத்திகளை இல. 53, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள பனை அபிவிருத்திச் சபையின் சந்தைப்படுத்தும் காரியாலயத்தில் விற்பனை செய்து வருமானத்தைப் பெறுங்கள்.

**நாட்டுக்காக உயிர் நீத்த உத்தமர்கள் நினைவாக வீட்டுக்கொரு பனம் விதையை நாட்டுங்கள்.**

**தலைவர்,**
பனை அபிவிருத்திச் சபை.

தலைமை அலுவலகம்:
பனை அபிவிருத்திச் சபை,
இல. 54, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/137)



# வெல்லுங்கள்!
# 1003 அற்புத பரிசுகள்.

நெஸ்டம் வழங்கும்
**'அழகான இல்லம்' போட்டி**


**1வது பரிசு**
சிங்கர் இரட்டைக்கதவு குளிர்சாதனப் பெட்டி

**2வது பரிசு**
சிங்கர் 4 அடுப்பு காஸ் குக்கர்

**3வது பரிசு**
சிங்கர் உணவு மேசை, அத்துடன் 6 நாற்காலிகள்

**600 பரிசுகள்** — ஒவ்வொன்றும் 'நெஸ்டம்' துவாய் செட் ஒன்றுடன் ஒரு 1.8 கி. இறும் ரின் நெஸ்பிறே முழு ஆடைப் பால் மா.

**400 பரிசுகள்** — 1988 செப்டெம்பர் 1 ம் திகதி முதல் வாரந்தோறும் கிடைக்கப்பெறும் சரியான முதலாவது 100 பிரவேசக் கூப்பன்களுக்கு 'நெஸ்டம்' மேசைக் கைக்குட்டைகளும் கவர்ச்சிகரமான மெகி உற்பத்திகளும்.




**போட்டி விதிமுறைகள்**


1. போட்டியில் பங்குபெறுவது மிகவும் சுலபம் - நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் பிரவேசக் கூப்பனில் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களைச் சரியாக நிரப்பி அத்துடன் நெஸ்டம் பக்கெட்டுகளிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட "அழகான இல்லங்கள்" இரண்டை இணைத்து பின்வரும் முகவரிக்கு தபாலில் அனுப்பவேண்டியதே.

   "அழகான இல்லம்" போட்டி, த. பெ. இல. 1711
   மே/பா. நெஸ்லே லங்கா லிமிட்டெட்
   டார்லி றோட், கொழும்பு-10.

2. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும். இது தொடர்பாக எவ்வித கடிதத் தொடர்பும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

3. நெஸ்லே லங்கா லிமிட்டெட் நிறுவனம் மற்றும் அவர்களது விளம்பர முகவர்களான கிராண்ட் பி. ஜே. கே. அன்ட் ஈ நிறுவன ஊழியர்களும் அவர்கள் குடும்பத்தினரும் தவிர்ந்த எல்லா இலங்கையரும் போட்டியில் பங்குபெறத் தகுதியுடையவர்களாவர்.

4. பிரவேசக் கூப்பன்களுக்கான இறுதித் தினம் 1988 நவம்பர் 10ம் திகதி.




**பிரவேசக் கூப்பன்**

1. நெஸ்டம் பின்வரும் 3 பிரதான சேர்மானங்களைக் கொண்டுள்ளது: ________, ________, ________
2. நெஸ்டம் ______ வகை விட்டமின்களால் போஷாக்கு நிறைந்தது.
3. 100 கிறும் நெஸ்டம் ________ இரும்புச் சத்து அடங்கியது.

பெயர் ________________

முகவரி ________________

________________

உங்கள் கூப்பனை பின்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்: "அழகான இல்லம்" போட்டி த. பெ. இல. 1711, மே/பா. நெஸ்லே லங்கா லிமிட்டெட் டார்லி றோட், கொழும்பு-10. அத்துடன் நெஸ்டம் பக்கெட்டுகளிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட 2 "அழகான இல்லங்களை"யும் இணைத்து அனுப்புங்கள்.

Licence No S 678




**Nestum**

**உங்கள் நாளை ஆரம்பிக்க ஆரோக்கியமான வழி!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டடங்களை உடைப்பதுமூலம் கல்விச் செல்வத்தை அழிக்க முடியாது

## கல்விப் பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம், செப் 18

பாடசாலைக் கட்டடங்கள் முக்கியமல்ல. கல்விதான் முக்கியம். கடந்த இரண்டு வருடங்களைப் பின்நோக்கிப் பார்த்தால் எத்தனை கட்டடங்கள் உடைக்கப்பட்டன என்று தெரியும்.

சிலர் நினைக்கிறார்கள் கட்டடங்களை உடைப்பதன்மூலம் ஒரு இனத்தின் கல்விச் செல்வத்தை அழித்துவிடலாம்என்று. இது ஒரு தவறான சிந்தனை ஆகும்.

யாழ் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்புத்துறை சென். யோசப் வித்தியாலய கட்டடத் திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும் வித்தியாலயத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்ச்சிகளுக்கு பிரதம விருந்தினர்களாக யாழ் ஆயர் வணக்கத்துக்குரிய பிதா தியோகுப்பிள்ளையும் கல்விப்பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகமும் அவரது பாரியாரும் கலந்து கொண்டனர்.

பாடசாலை அதிபர் திரு. ஜி. பென் அல்பிரட் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. வெற்றிவேலு சபாநாயம் மேலும் பேசியதாவது:-

ஒருவன் கற்ற கல்வி அவனது வாழ்நாள் முழுவதும் தொடர்கிறது. அதாவது அவனது மரணம் வரையில் நிலைக்கின்றது.

நாம் எதனை இழந்தாலும் எமது கல்விச்செல்வத்தை இழந்துவிடக் கூடாது. இந்த நோக்கத்துக்காகத்தான் இளைஞர்கள் எதனைத் தடை செய்த போதிலும் கல்வியையும் பரீட்சையையும் தடைசெய்யவில்லை.

இந்தப் பாடசாலையின் அதிபர் திறமைசாலி எந்தக் கல்விப்பணிப்பாளர் இருந்தாலும் அவர்களின் துணைகொண்டு தனது காரியத்தை சாதிக்கும் திறன் கொண்டவர்.

இதனால்தான் இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைக்க முடிகின்றது.

இப்படி அவர் கூறினார்.

யாழ் ஆயர் வணக்கத்துக்குரிய பிதா தியோகுப்பிள்ளை கூறியதாவது,

பரீட்சைக்கு மட்டும் மாணவர்களைப் பாடசாலைகள் தயார்படுத்தினால் போதாது.

அவை மாணவர்களிடம் உள்ள திறமைகளையும், ஆற்றல்களையும் வெளிக்கொணர வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட உதவி அரசாங்க அதிபர் ஆ. மகாலிங்கம் உரை நிகழ்த்துகையில் இந்தக் கஷ்டமான காலகட்டத்தில் எமது பிள்ளைகள் கல்வியில் வளர்ச்சியடைய நாம் எமது பங்களிப்பை வழங்க வேண்டும் என்றார்.

பாடசாலை அதிபர் திரு. ஜி. பென் அல்பிரட் தனது தலைமை உரையில் இந்தப் பாடசாலை ஆசிரியர்களும் பெற்றோரும் இதன் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியிருக்கின்றார்கள் என்று தெரிவித்தார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரும் முன்னைநாள் அதிபருமான திரு செபஸ்ரியன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு திருமதி சபாநாயகம் பரிசில்களை வழங்கினார்.

கல்விப் பணிப்பாளருக்கும் யாழ் ஆயருக்கும் வாழ்த்துமடல்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து உப அதிபர் திரு பெனன்டோ நன்றியுரை நிகழ்த்தினார்.

(இ-5)

## போட்டியின்றித் தெரிவு

தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கக் கிளைக்குழுத் தேர்தலில் கிளை ஒன்று தவிர்ந்த ஏனைய 14 கிளைகளினதும் உறுப்பினர்கள் போட்டியின்றித் தெரியப்பட்டனர்

கிளை ஒன்றுக்கு 20 (பேர்) வேட்பாளர்களாக இரு அணிகளாகப் போட்டியிட்டனர்.

இதில் ஒரே அணியைச் சேர்ந்த 9 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-75)


## மழைப் போர்வைகள்
(RAIN COATS)

மழை காலப் பாவனைக்குரிய மழைப் போர்வைகள் தற்போது எமது தயாரிப்பில் உள்ளன. சகல அளவுகளிலும் கிடைக்கும்.

மேலதிக விபரங்கட்கு:

ராம்சன்ஸ்

பிரயாணப் பொருட்கள் தொழிலகம்

சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

(6552)


## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன்
சின்னத்துரை சற்குணராசா
(சினன்)

தோற்றம்: 29-11-1968   மறைவு: 18-06-1988

தாயொருத்தி துயரத்தில்
தாலாட்டுப் பாடுகிறார்
துயரத்தில் சொல்லெடுத்து
துன்பத்தில் இசையெடுத்து - உன்னை
தூங்க வைத்த பின்
தாயொருத்தி துன்பமாய்
தாலாட்டுப் பாடுகிறாள்.

(6493)   நண்பர்கள்.

## 3ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
வேலுப்பிள்ளை முருகேசபிள்ளை
(கோப்பாய் ரஜினி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

தோற்றம்: 27 - 04 - 1922   மறைவு: 21 - 09 - 1985

திதி: 18. 09. 1988

எம் அன்புத் தெய்வமே! உங்கள் பூதவுடல் அழிந்தாலும் வஞ்சமில்லா பூமுகவும் கள்ளமில்லா வெள்ளையுள்ளமும் என்றென்றும் எம் இதயத்தை விட்டகலா. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''ரசஞ்னி வாசம்''
கோப்பாய் வடக்கு.   (6664)

# உலகே வியக்கும் உத்தம வீரன்
## லெப் - கேர்ணல் - திலீபன்




ஈழத்தில் உதயம்: 29 - 11 - 1963   ஈழமண்ணில் சங்கமம்: 26 - 09 - 1987

புலிவழி ஒளிரும் திலீபனே
புரட்சியில் காந்தியின் தலைவனே
கலியுகம் வணங்கும் முதல்வனே - இக்
காணிக்கை உன்கால் பவனிக்கே

பருத்தித்துறை - புலோலி
தெ. ப. பொ. உ. வி. கூட்டுறவுச் சங்கமும்,
வடமராட்சி மக்களும்.

(C/65)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு வீதி மூடப்பட்டதால் மக்கள் கஷ்டம்

மண்டைதீவு, செப்.18

யாழ் பண்ணை மண்டைதீவு பிரதான வீதி மூடப்பட்டுள்ளதால் பொதுமக்கள் இவ் வீதியால் போக்குவரத்து செய்யமுடியாமல் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.

தற்பொழுது பிரயாணிகள் அல்லைப்பிட்டி ஊடாகவே மண்டைதீவுக்கு பிரயாணம் செய்து வருகின்றார்கள்.

இதனால் பஸ் கட்டணம் ஒரு ரூபா அதிகரித்துக் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று தினசரி மினிபஸ்களில் பிரயாணம் செய்து வரும் பிரயாணி ஒருவர் உதயனுக்கு கவலையுடன் தெரிவித்தார்.

யாழ் நகரில் இருந்து அரைமணித்தியாலயத்திற்குள் மண்டைதீவுக்கு போய்ச் சேர வேண்டிய பிரயாணிகள் நீண்டதூரம் பிரயாணம்செய்ய வேண்டிய நிலை தற்பொழுது ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பகுதி பிரயாணிகளின் கஷ்ட நிலையை உணர்ந்து மேற்படி வீதியை திறந்து பொது மக்கள் பாவனைக்கு விடுமாறு யாழ்நகர கொமாண்டர் பிரகேடியர் காலோனிடம் இப்பகுதி பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். (இ-88)

## 3 ஆவது ஆண்டு விழா

உடுவில் கற்பொக்கணை சனமதி சனசமூக நிலைய மூன்றாவது ஆண்டு நிறைவு விழா இன்று 18 ஆம் திகதி நடைபெறுகிறது.

ஆண்டுவிழா நிகழ்ச்சிகளுக்கு சுதுமலை சின்மய பாரதி பாடசாலை ஆசிரியர் திரு. இ. ஆனந்த நடராசா தலைமை வகிப்பார்.

பிரதம விருந்தினராக யாழ். செயலகத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வட மாநிலவீதி அபிவிருத்தி அதிகார சபைப்பணிப்பாளர் திரு. எஸ். பாலேந்திரா உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொள்கின்றனர். (இ - 90)

அரச ஊழியர்களுக்கு

## 2 வருட சம்பளக் கடன் சுற்றுநிருபம் தரும் ஏமாற்றம்

யாழ்ப்பாணம். செப். 18

பொது நிர்வாக அமைச்சினால் அரச ஊழியர்களுக்கு இரண்டு வருட சம்பளத்தைக் கடனாக வழங்க வேண்டுமென்ற சுற்று நிருபத்தினால் வடக்கு. கிழக்கு மாகாணத்தில் இருக்கும் 98 விதமான அரச ஊழியர்களும் பயன் அடையக் கூடியவாய்ப்பு இல்லை.

இப்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின பொதுச் செயலாளர் திரு த. மகாசிவம் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திரு. சிறிவர்த்தனவுக்கு அறிவித்துள்ளார்.

இந்தச் சுற்று நிருபம் வந்தவுடன் இரண்டு வருட சம்பளத்தைக் கடனைப் பெற்று தமது இழப்புக்களின் ஒரு பகுதியை ஏனும் நிவர்த்தி செய்யலாம் என எதிர்பார்த்திருந்த அரச ஊழியரின் நிலை இலவு காத்த கிளியின் கதை போல் முடிந்து விட்டது.

எனவே நிபந்தனைகளை நீக்கி அரச ஊழியர்கள் அனைவரும் பெற்ற கடனைத் தமது சம்பளத்தில் இருந்தோ அல்லது ஓய்வூதியத்திலிருந்தோ மாதாமாதம் கழிப்பதற்கு சம்மதத்தைப் பெற்று எவரின் பிணையுமின்றி கடனைப் பெறக்கூடிய வாய்ப்பை உருவாக்க நடவடிக்கை எடுக்கவும் — என்று அவர் மேலும் கேட்டுள்ளார். (ஒ)

## ஹாட்லிக் கல்லூரி 150 ஆவது ஆண்டுவிழா

யாழ்ப்பாணம் செப் 18

ஹாட்லிக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழாவை கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் அக்டோபர் மாதம் 22 ஆம். 23 ஆம். 24ஆம் திகதிகளில் கொண்டாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதே போன்று கொழும்புக் கிளையும் லண்டன் கிளையும் 150 ஆம் ஆண்டு விழாவை கொண்டாட நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. (ச)

## நன்றி தெரிவிப்பு

கொடிகாமம், செப். 18

வடமாநிலக் கல்விப் பணிப்பாளராக திரு. வெற்றிவேலு சபாநாயகம் நியமிக்கப்பட்டது பெரும்பேறாகும் அவரின் வரவு தென்மராட்சிப் பாடசாலைகளுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

சாவகச்சேரி. இந்துக் கல்லூரி அபிவிருத்திச் சங்க நிர்வாக சபைக் கூட்டத்தில் உரையாற்றும் பொழுது திரு. அ. ஆறுமுகம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சபாநாயகத்தின் நியமனத்துக்கு நன்றி தெரிவித்து கல்வி அமைச்சுக்குத் தீர்மானம் ஒன்று இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

# மனித உரிமைகள் மீறல் சித்திரவதை படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும்

## சென்னைக் கூட்டத்தில் கோரிக்கை

லண்டன், செப். 18

மனித உரிமைகள் மீறல், சித்திரவதை, படுகொலை ஆகியவை அனைத்தும் இலங்கையில் நிறுத்தப்படவேண்டும்,

இனப்பாகுபாடு, தடுப்பு மற்றும் சிறுபான்மையினர் உரிமை பாதுகாப்பு பற்றிய பிரச்சினைகளைக் கவனிக்க ஐக்கிய நாடுகள் சபையின் துணைக்கமிஷனின் 40ஆவதுகூட்டம் சென்ற மாதம் 8ஆம்திகதி முதல் இம்மாதம் 2ஆம் திகதி வரை சென்னையில் நடைபெற்றபோதுமேற்கண்ட கோரிக்கை விடப்பட்டது.

மக்கள் உரிமை பாதுகாப்பு வழக்கறிஞர்கள் சங்கம், சர்வதேச ஊனமுற்றோர் நலக்கழகம், சிறுபான்மையினர் உரிமைப் பாதுகாப்புச் சங்கம்போன்ற அரசு சார்பற்ற பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினர்.

இலங்கையில் உள்ள ஈழத்தமிழரின் நிலைபற்றி அவர்கள் கவலை தெரிவித்தனர்.

இந்திய அமைதிப் படையின் நடவடிக்கைகளுக்கு அவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

கூட்டத்தில் அவர்கள் வலியுறுத்திய ஏனைய கோரிக்கைகள் வருமாறு;

1. இந்திய அமைதிப் படை ஈழத்தில் உடனடியாகப் போர்நிறுத்தம் செய்யவேண்டும்.

2. அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படவேண்டும்.

3. ஐ. நா. தீர்மானப்படி இலங்கையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் செயல்பட அனுமதிக்கப்படவேண்டும்.

4. போரில் காயமடைந்தவர்களின் பட்டியலைத்தயாரித்து அவர்கள் சிகிச்சை பெறுவதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட வேண்டும்,

மேற்கண்ட கோரிக்கைகளை அவர்கள் வற்புறுத்தி, அவற்றை ஐ.நா. சபையின் துணைக் கமிஷன் பரிசீலிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். (இ-எ)

## ஜீ.சி.ஈ. பரீட்சை மண்டபம்

வடமராட்சி, செப்.18

சின்னத்தம்பி வித்தியாலயம்ஜீ சி.ஈ.பரீட்சை மண்டபமாக இயங்கப் பரீட்சை ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார். (ச-160)

## இராமநாதன் கல்லூரிப் பவளவிழா

யாழ்ப்பாணம்,செப்.18

மருதனமடம் இராமநாதன்கல்லூரியின்பவள விழாக் கொண்டாட்டத்தைப் பற்றி ஆலோசிக்கும்முகமாக நாளை திங்கட் கிழமை பி.ப 2 மணிக்குக் கல்லூரி அதிபர், திருமதி. குமாரசாமியின் தலைமையில் கூட்டம் நடைபெறும். (ச)

# சென்றலைட்ஸ் கேடய இறுதிப் போட்டி இன்று

சென்றலைட்ஸ் வெற்றி கேடயத்துக்காக சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 ஆவது ஆண்டு மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12. 30 மணிக்கு யாழ் ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இப் போட்டியில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கு எதிராக அரியாலை விளையாட்டுக் கழகம் மோதும்.

பிரதம விருந்தினராக திருவாளர் வி. ரி. சிவலிங்கம் (முகாமையாளர் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை) கலந்துகொண்டு வெற்றி பெறும் கழகத்துக்கு பரிசில்களை வழங்குவார்.

சடந்த 6 ஆண்டுகளாக நடைபெற்ற போட்டிகளில் சென்றலைடஸ் விளையாட்டுக்கழகம் 3 வருடங்களும் (1983, 1985, 1986) அரியாலை விளையாட்டுக்கழகம் 2 வருடங்களும் (1982, 1984) ஐடியல் கிரிக்கட்கழகம் 1 வருடமும் (1987) சென்றலைட்ஸ் வெற்றி கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டன.

இப்போட்டி நடைபெறுவதற்கு முன்னர் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் (25 ஓவர்) கிரிக்கெட் போட்டி காலை 8. 30 மணிக்கு ஆரம்பமாகும். இப்போட்டியிலும் சென்றலைட்ஸ் வி. கழகத்தை எதிர்த்து அரியாலை வி. கழகம் மோதும். இப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு எம். ஆர் மணிவண்ணன் ஞாபகார்த்த வெள்ளிக்கேடயம் வழங்கப்படும்.

## விளையாட்டுப்போட்டி

கொடிகாமம் திருநாவுக்கரசு கொத்தணி மகாவித்தியாலய அமைப்பில் உள்ள பத்துப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி கொத்தணி அதிபர் திரு. ச. சின்னத்தம்பி தலைமையில் எதிர் வரும் 21 ஆம் திகதி புதன் கிழமை வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (ச)


UDUVIL GIRLS' COLLEGE
FURTHER EDUCATION PROGRAMME
a full time course
in
COMPUTER PROGRAMMING
AND
DATA PROCESSING
Languages : BASIC, COBOL and Word Processing leading to
DIPLOMA IN COMPUTER PROGRAMMING
AND
UNDERSTANDING COMPUTERS
(PITMAN LONDON)
Lectures and Practicals
on
ARCHIMEDES - IBM PC (com), RADIO - SHACK
Basic Programming
Commencing 19th September, 1988
Week-days from 9-00 a.m. to 3-00 p.m.
Duration 6 months
(Course fee Rs. 1,500/-)
Contact :-
The Directress.
C/220


## ஓராண்டு நினைவு அஞ்சலி



சமீஸ் செல்வராசா

தோற்றம்: 27-11-1979 மறைவு: 31-08-1987


எங்கள் கண்மணியே!
நீ
கண்மூடிக் கழிந்ததடா ஓராண்டு
எம் கண்மணியே கண்ணீர் வற்றவில்லை
எம் மனங்களிலே நீ மறையவில்லை
உம் நினைவுகளோ
என்றும் அழிவதில்லை
எங்கள் அன்புச் செல்வமே

உன் நினைவால் வாடும்
அப்பா, அம்மா,
அண்ணன்மார், செல்வன், சதிஸ்,
தங்கைமார் ஜெர்மிலா, சுமித்திரா,
பெரியஐயா, அத்தை,
மாமன்மார், மாமிமார்,
சித்திமார், சித்தப்பா,
அம்மம்மா, ஐயா.

2/2, மருதடி வீதி,
யாழ்ப்பாணம். (6669)

தான் கொண்ட இலட்சியத்துக்காக அண்ணல் காந்தி அடியோற்றி தன்னுயிர் ஈந்த

# தியாகத் தீபம் திலீபனுக்கு அஞ்சலி!




"மக்கள் புரட்சி வெடிக்கட்டும். தமிழீழம் மலரட்டும்" - திலீபன் மரணப்படுக்கையில் இருந்து மக்களுக்கு விடுத்த கடைசிச் செய்தி.

- தமிழீழ மக்கள் சார்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ் ஈழத்தின் விடுதலை பாரீர்!
# திலீபனின் பசி அடங்கும்!!



"மரணத்தை பூரண மகிழ்ச்சியோடு நான் ஏற்றுக் கொள்ளுகின்றேன். ஏற்கனவே வீரமரணமடைந்த அறுநூற்றி ஐம்பது போராளிகளுடன் சேர்ந்து வானத்தில் இருந்து எனது மக்கள் விடுதலை பெறுவதை நான் பார்ப்பேன். எனது சாம்பல் மேட்டில் இருந்து புதிய அத்தியாயம் எழுதப்படவேண்டும்"

**- இ. திலீபன்**

**செப்ரெம்பர் 16 இல்**

**வாழ்க தமிழ்! வெல்க தமிழ் ஈழம்!!**

**வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.**

(C. 224)


## இன்று விருந்துபசாரம்

வடமராட்சி, செப் 18

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உபவேந்தராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் ஏ. துரைராசாவையும் திரு.ஏ. சோமசுந்தரம்பிள்ளையையும் கௌரவிக்கும் முகமாக இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணிக்கு ஹாட்லிக் கல்லூரியில் விருந்துபசாரம் நடைபெறும்.

இவ்விருந்துபசாரத்தை இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் வழங்குகிறார்கள்,

[ச-160]

## பல்கலைக்கழக மாணவர் பகிஷ்கரிப்பு

மட்டக்களப்பு' செப் 18

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த ஒரு வாரகாலமாக விரிவுரைகளை பகிஷ்கரித்து வருகிறார்கள்.

''ராக்கிங்'' தொடர்பாக நான்கு மாணவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை வாபஸ் பெறப்படவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து இப் போராட்டம் நடைபெறுகிறது.

கடந்த மாதம் புதிய மாணவர்ஒருவர்ராக்கிங் காரணமாக பாதிக்சப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்சப்பட்டிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணையில் ஈடுபட்ட நிர்வாகம் 2 ஆம் 3ஆம் ஆண்டு மாணவர்கள் நால்வர்மீது பின்வரும் ஒழுங்கு நடவடிக்கைகளைஎடுத்தது.

★ ஆறுவாரங்கள் விரிவுரைகளில் கலந்து கொள்ள முடியாது.

★ விடுதியில் தங்குவதற்கான அனுமதி ரத்து.

இந்த ஒழுங்கு நடவடிக்கைகளை வாபஸ் பெறப்படவேண்டுமென்று மாணவர்கள் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டதை அடுத்தே இப் போராட்டம்தொடர்வதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

மாணவர்கள் பகிஷ்கரிப்பு தொடருமானல் பல்கலைக் கழகத்தை மூடுவதைத் தவிர வேறு வழியில்லையென பேராசிரியர் ஒருவர் தெரிவித்தார். (ஓ-21)

## சிறிமா பதவிக்கு வந்தால்...!

கொழும்பு, செப் 18

கைது செய்யப்பட்ட பின்னர் காணமற்போய் விட்டதாக அறிவிக்கப்பட்டவர்கள்,மர்மமான முறையில் உயிரிழந்தவர்கள்பற்றி,நான்பதவிக்கு வந்தவுடன் விசாரிக்குமாறு உத்தரவிடுவேன்.

சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா எம்பிலிபிட்டியாவில் நடந்த கட்சிக்கூட்டத்தில் பேசியபோது முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது;

இரண்டு மாதங்களில் 12 லட்சம் பேருக்குவேலை வாய்ப்பு வழங்கப் போவதாக பிரதமர் பிரேமதாஸ கூறிவருகின்றார். அவர் என்ன மந்திரவாதியா?

1980 வேலை நிறுத்தத்தில் வேலையிழந்தபலருக்கு இன்னும் வேலை வழங்கமுடியாதிருக்கிறது. அந்த நிலையில் 2 மாதங்களில் 12 லட்சம் பேருக்கு வேலையா?

இன்று ஒருவர் வீதியில் நிம்மதியாகச் செல்ல முடியாதுள்ளது. ஏன் வீட்டில் கூட நிம்மதியாக நித்திரை கொள்ள முடியாதிருக்கிறது.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார். (ஓ-எ


## 31 ஆம்நாள் நினைவஞ்சலியும் சபிண்டிகரண அழைப்பும்



செல்வன்

### ந. விக்கினேஸ்வரன் [விக்னு]

நவரட்ணம் தனலக்ஷ்மியின் அருமைப் புதல்வன் விக்கினேஸ்வரனின் [விக்னு] அந்தியேட்டிக்கிரியைகள் 18-9-88 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இத்தகவலை உற்றூர், உறவினர்,நண்பர்கள், அனைவரும் ஏற்றுஇவ் வைபவத்தில் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

புதிய செங்குந்தா வீதி
திருநெல்வேலி கிழக்கு,
கல்வியங்காடு. (6666)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் பொ. இராஜேஸ்வரன்

(பிரதி பொலீஸ் மா அதிபர்)

மலர்வு: 31 - 7 - 1931 உதிர்வு: 7 - 8 - 1988

அன்போடும் பண்போடும்
அழகு முகம் காட்டி நீங்கள்
அரவணைத்து வளர்த்தீர்கள்
இல்லறமே நல்லறமாய்
இனிதாய் அமைந்த நேரம்
ஈசன் மலரடியில், இணைந்து
விடப் போவதென்ன?
காயம் பட்ட உள்ளங்கள்
கலங்கித் தவிக்குதய்யா,
உடல் அழிந்து போனலும்
உயிருக்குயிராகத் திடமாக
நின்று எங்கள் துயரங்கள்
தீர்ப்ப தெப்போ!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அமரர் திரு பொ. இராஜேஸ்வரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 20-9-88 செவ்வாய்க்கிழமை நகுலேஸ்வரத் தீர்த்தக் கரையில் (கீரிமலையில்) நடைபெற்று, வீட்டுக் கிரியைகள் வியாழக்கிழமை 22-9-88 அன்னரது வீட்டில் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள் யாவரையும் கலந்து கொள்ளும்படி பணிவன்போடு வேண்டிக் கொள்ளுகின்றோம்—

அன்னரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட, அனுதாபச் செய்தி அனுப்பிய, மலர் வளையம் வைத்துக் கௌரவித்த அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மனைவி, மக்கள், சிறியதாய்,
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்மார், மைத்துனிமார்.

தொல்புரம்,
சுழிபுரம். [6674]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாம் தலை.

**பொருள்:**
எல்லா உறுப்புக்களும் நிறைந்ததாய் இடையூறுகளுக்கு அஞ்சாததாய் உள்ள வெற்றி தரும் படை, அரசனுடைய செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்ததாகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
32073
யாழ்ப்பாணம்.
18-09-1988 த. பெ. இல. 23


## துண்டாடல் வேண்டாம்

வெலிஓயா பகுதியை வடமத்திய மாகாணத்துடன் இணைப்பதற்குரிய நடவடிக்கைகள் வெகு சாதுரியமாக நடைபெற்றுவருவதாகச் சொல்லப்படுகிறது.

வெலிஓயா என்பது முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கும் மணல் ஆறுப் பகுதி. அதனை மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ''எல்'' பிரிவாக்கி, 43 தமிழர் கிராமங்களைப்பறித்து,இப்போது சிங்களக் குடியேற்றம் நடந்து வருகிறது.

அதாவது, மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தமிழர் கிராமங்களை அரசாங்கக் காணிகளாக்கிவிட்டு தமிழர்களை அங்கிருந்து விரட்டி அடித்துவிட்டு, இப்போது அதே காணிகளில் மகாவலித்திட்டக் குடியேற்றம் என்ற பெயரில் சிங்களவர்கள் குடியமர்த்தப் பட்டிருக்கிறார்கள்.

தமிழ் மாவட்டத்தில் இருந்த மணல் ஆறுப் பகுதியை சிங்கள மாவட்டத்தின் வெலிஓயாவாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளில் முதன்மையானது குடியேற்ற விவகாரம். தமிழ் மக்களுக்கு சொந்தப் பகுதி என்று சொல்லிக்கொள்ள எதையும் விட்டு வைக்கக்கூடாது என்ற நோக்கத்துடன் நடத்தப்படுவதுசிங்களக் குடியேற்றம்; திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றம்; அரசாங்கத்தின் ஆதரவுடன் நடக்கும் குடியேற்றம்.

சுதந்திரத்துக்குப் பின்னர், கிழக்கில் தான் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் அதிகமாக உருவாக்கப்பட்டன. இப்போது அது வடக்கில் முல்லைத்தீவுக்கும் வந்து விட்டது.

அதுவும் வடக்கையும் கிழக்கையும் ஒரே நிலப்பரப்பாகத் தொடுக்கும் மணல் ஆறுப்பகுதியைத் தெரிந்து எடுத்து குடியேற்றம் நடத்தி, சிங்களப் பிரதேசமாக்கி இருக்கிறார்கள்.

வடக்கையும் கிழக்கையும் ஒன்றாக இணைக்கும் பிரகடனத்தை ஜனாதிபதி வெளியிட்டு விட்டார். அதே வேளை மணல் ஆறாக இருந்து வெலிஓயாவாகிவிட்ட பகுதியை சிங்கள மாவட்டமான அநுராதபுரத்துடன் இணைக்க திட்டவட்டமான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த முயற்சி செயல் வடிவம் பெற்றுவிட்டால், வடக்கு - கிழக்கு இணைப்பு வெறும் பெயரளவில் மட்டுமே இணைப்பாக இருக்கும். செயலளவில் வடக்கு — கிழக்குத் தொடர் நிலப்பகுதியின் குறுக்கே தடைக்கல் போடப்பட்டு விடும். வடக்கும் கிழக்கும் துண்டாடப்பட்டு விடும்.

வெலிஓயாப் பகுதியில் ஏற்கனவே ஐயாயிரம் சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டு விட்டன. மேலும் பத்தாயிரம் குடும்பங்களைக் குடியேற்றத் திட்டமுண்டாம்.

மொத்தத்தில் ஏட்டளவில் இணைப்பும், செயலளவில் துண்டாடுதலும் நடந்துகொண்டிருக்கிறது. வெலிஓயா குடியேற்றத் திட்டம் ரத்துச் செய்யப்படாவிட்டால் வடக்கு-கிழக்கு இணைப்பால் பயன் எதுவும் இருக்கப்போவதில்லை. அதுவெறும் ஏட்டுச்சுரைக் காயாகவே அமையும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் நடக்கவில்லை என்று இலங்கை அரசு விடாப்பிடியாகச் சொல்லி வருகிறது. ஆனால் அது பொய் என்று நிரூபிக்க வெலிஓயா ஒன்றே போதுமானது.

வடக்கு - கிழக்கில் தேர்தல் மூலம் மாகாணசபையை உருவாக்குவதில் கவனம் செலுத்துவதற்குமுன், இலங்கை அரசு தனது சிங்களக் குடியேற்றத் திட்டங்களை நிறுத்துவதும், ரத்துச் செய்வதும் அவசியமாகும். இலங்கை அரசு இந்திய ஒப்பந்தத்தை உண்மையிலேயே மதித்தால், கனம் பண்ணினால், தமிழர் பிரதேசங்களில் தான் நடத்தும் சிங்களக் குடியேற்றங்களை நிறுத்த வேண்டும். அது குறித்து பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

## நல்லூரில் ராகவேந்திரர் விழா

நல்லூர் கோவில் வீதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஸ்ரீ ராகவேந்திரர் விழாவின் நான்காவது நாள் நிகழ்ச்சி இன்று விஷேசபூஜை ஆராதனையுடன் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும்.

திரு. கணநாதலிங்கம் மங்கள விளக்கேற்ற அஷ்டோத்திர நாம பூஜை ஆராதனை நடைபெற்று—அதன்பின் ஸ்ரீமதி லக்ஷ்மிதேவி பாலகிட்ணரின் இசைக்கச்சேரி இடம்பெறும்.

நாளை 19ஆம் திகதி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மங்கள விளக்கேற்ற அஸ்டோத்தர நாம பூஜை ஆராதனை நடைபெற்று திரு.வே. சிவஞானத்தின் பண்ணிசையுடன்விழா நிறைவுபெறும்.

12 ஆண்டுகளின் பின்னர் முதல் தடவையாக

# அமெரிக்காவும் சோவியத் யூனியனும் கலந்து கொள்ளும் ஒலிம்பிக் போட்டி

## தென்கொரியத் தலைநகர் சோலில் ஆரம்பம்

சோல், செப் 17

பன்னிரண்டு ஆண்டுகள் இடைவெளியின் பின்னர் முதன் முறையாக இரண்டு வல்லரசுகளான அமெரிக்கா, சோவியத்யூனியன் கலந்து கொள்ளும் 24 ஆவது ஒலிம்பிக் போட்டி இன்று (இலங்கை நேரப்படி காலை 6 மணி) ஆரம்பமாகியது.

159 நாடுகள் பங்குபற்றும் இப்போட்டியில் 13 ஆயிரம் வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

6 ஆயிரம் பத்திரிகையாளர்களும் ஒலிம்பிக் செய்திகளைச் சேகரிப்பதற்காக சோல் ஒலிம்பிக் நகரில் குழுமியிருக்கின்றனர்.

இம்முறை போட்டியில் 23 விளையாட்டுகள் இடம்பெறுகின்றன. ஒலிம்பிக் போட்டி ஆரம்பமானபோது ஆறு விளையாட்டுக்கள் மட்டுமே இடம்பெற்றன.

இந்த ஆண்டு புதிதாக டென்னிஸ், டேபிள் டென்னிஸ் விளையாட்டுக்கள் ஒலிம்பிக் போட்டியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும்இப்போட்டிக்கு அமெரிக்கா முழுப் பாதுகாப்பையும் வழங்கியுள்ளது. (எ)

**வெளி உலகில்**

## பரிசுத்த பாப்பரசர் தென் ஆபிரிக்காவில்

ஜோஹன்னஸ் பேர்க், செப். 17

பரிசுத்த பாப்பரசர் பயணஞ் செய்த விமானம் காலநிலை சீராக இல்லாத காரணத்தால் எதிர்பாராத விதமாக தென்னாபிரிக்காவில் ஜோஹன்னஸ்பேர்கில் உள்ள புறநகர் விமான நிலையம் ஒன்றில் இறங்கியது.

பாப்பரசர் விமானத்தில் இருந்து வெளியே இறங்கவில்லை. தென் ஆபிரிக்க வெளியுறவு அமைச்சர் பிக்போத்தா விமானத்தினுள் சென்று பாப்பரசரைச் சந்தித்தார்.

தென் ஆபிரிக்காவின் நிறவெறி அரசைப் பலமாகக் கண்டித்துவரும் பாப்பரசர் ஆபிரிக்க நாடுகளில் 10 நாள் விஜயம் ஒன்றைமேற்கொண்டுக்கிறார். தென் ஆபிரிக்கா அவர் விஜயம் செய்யும் நாடுகளின் பட்டியலில் இடம்பெறவில்லை.

## 94 ஆயிரம் அகதிகளை 1989இல் அமெரிக்கா அனுமதிக்கும்

வாஷிங்டன், செப் 17

அடுத்த ஆண்டு 94 ஆயிரம் அகதிகளை அமெரிக்காவினுள் அனுமதிக்க அதிபர் றேகன் நிர்வாகம் உத்தேசித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த அகதிகளில் 53 ஆயிரம் பேர் ஆசியாவைச் சேர்ந்தவர்களாக இருப்பர். பெரும்பாலும் வியட்னாமில் அமெரிக்கப் படை வீரர்களுக்குப் பிறந்த குழந்தைகளாகவே இருப்பர் என்று வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் தெரிவித்தார்.

அனுமதிக்கப்படவுள்ள ஏனைய அகதிகள் நாடுவாரியாக வருமாறு:

சோவியத் யூனியன். கிழக்கு ஐரோப்பா 24,500
லத்தின் அமெரிக்கா 3,500
ஆபிரிக்கா 2 000
மத்திய கிழக்கு, தெற்கு ஆசியா 7,000 (எ)

## கடத்தல் பயணிகள் மீட்கப்பட்டனர்

கேப்டவுன், செப். 17

லெலபாத்தோவில் தீவிரவாதிகளினால் பயணிகளுடன் கடத்தப்பட்ட பஸ்ஸை அரசுப் படைகள் மீட்டன.

இது சம்பந்தமான நடவடிக்கையில் தீவிரவாதிகள் மூவர் உயிரிழந்தனர்.

69 பயணிகளும் காப்பாற்றப்பட்டனர்.

## ராஜினாமாச் செய்க

ரங்கூன், செப். 17

அரசு ஆயுதபடையினர் ஆளும் அரசியல் கட்சியில் இருந்து உடனடியாக இராஜினாமாச் செய்யும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

பர்மா அரசு இது சம்பந்தமான கட்டளையை வானொலி மூலம் விடுத்தது. (எ)

## இரசாயன ஆயுத உற்பத்தியில் லிபியா

நச்சு இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை லிபியா கட்டி முடித்திருப்பதாக அமெரிக்கா நேற்று அறிவித்தது.

லிபியாவின் இந்த நடவடிக்கை கவலையைத் தருவதாக அமெரிக்க ராஜாங்க அமைச்சு நேற்றுத் தெரிவித்தது. (எ)

## ஹங்கேரியுடன் தென் கொரியா ராஜரீக உறவு

சோல், செப்.17

முதன்முறையாகச் சம்யூனிஸ்ட் நாடு ஒன்றுடன் ராஜரீகத் தொடர்புகளை வைக்கத் தென்கொரிய அரசு தீர்மானித்துள்ளது. ஹங்கேரியே அந்தக்கம்யூனிஸ்ட்நாடு.

தென் கொரியாவுடன் ராஜரீகத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளக் ஹங்கேரி முன்வந்ததை வடகொரிய அரசு கண்டித்திருக்கிறது. (எ)

---

விடுதலைப் புலிகள் தேர்தலில் ஈடுபட முன்வந்தால்

# சகல அமைப்புகளையும் உள்ளடக்கிய ஒரே வேட்பாளர் பட்டியல்

## ஆட்சியில் புலிகளுக்குப் பிரதான பங்கு

### பி. பி. சி. தமிழோசைக்கு அமிர் பேட்டி

லண்டன்'செப்.18

மாகாணசபைத் தேர்தலில் பங்குபெற தமிழீழ விடுதலைப் புலிகளும் இணங்கினால் சகல அமைப்புகளையும் கொண்ட பொதுவான ஒரே வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்படவேண்டும். ஆட்சியில் விடுதலைப் புலிகளுக்குப் பிரதான இடம் வழங்கப்படவேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பி.பி.சி. கொழும்புச் செய்தியாளர் கிறிஸ் நட்டாலுக்கு கூட்டணிச் செயலதிபர் அ. அமிர்தலிங்கம் அளித்த பேட்டி தமிழோசையில் வெள்ளி இரவு ஒலிபரப்பானது. அதிலேயே திரு அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பேட்டியில் திரு.அமிர்தலிங்கம் தெரிவித்திருப்பதாவது;

கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர்களோடு நேரடியாகப் பேச்சுக்கள் நடத்துவதற்கு தொடர்ந்து நடந்து கொண்டிருந்த யுத்தம் தடையாக இருந்தது.

அதனால்தான் நாம் எல்லோரும் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தி அவர்கள் எல்லோரும் வெளியே வந்து பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்று கேட்டோம்.

இப்போது இந்த 5 நாள் யுத்த நிறுத்தத்தை தகுந்த முறையில பயன்படுத்தி அவர்கள் வெளியில் வந்து பேசும்படி விரும்புகின்றோம்.

அதற்கான சூழ்நிலையை, முயற்சியை இந்திய ராணுவமும் இந்திய அரசும் மேற்கொள்ள வேண்டும் என்றும் வேண்டுகின்றோம்.

#### நல்ல சந்தர்ப்பம்

பல்வேறு பிரஜைகள் குழுக்கள், வடக்கு,கிழக்கில் இருந்து மக்கள் தலைவர்கள், யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி தலைவர்களோடு பேச ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்க வேண்டும் என்று கோரி வந்தார்கள்

அந்த சந்தர்ப்பம் இப்போது கொடுக்கப்பட்டுஉள்ளது.

நம்பிக்கை ஏற்படக் கூடிய வகையில் செயற்பட்டு அச்சந்தர்ப்பத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர்கள் பயன்படுத்தக் கூடிய சூழ்நிலையை இந்திய ராணுவம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொண்டு வருகிறோம்.

கடந்த 24 மணித்தியாலயங்களில் எவ்வித சம்பவங்களும் நடைபெறாது யுத்த நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றிருப்பது நம்பிக்கையைக் கொடுக்கின்றது.

கூடிய விரைவில் ஒரு ஆக்கபூர்வமான பதில் தமிழீழ விடுதலைப் புலிகள் பக்கத்தில் இருந்து கிடைக்க வேண்டும் என்றே எல்லாத் தமிழ் மக்களும் விரும்புகின்றார்கள்.

#### நாமும் முயன்று வருகிறோம்

இப்போதும் ஒரு சமாதான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்க நாமும் எம்மாலான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

தொடர்பு கொள்ளக் கூடியவர்களோடுதொடர்பு கொண்டு, ஏனைய இயக்கங்களின் தலைவர்களோடு தொடர்பு கொண்டு ஒரு ஒற்றுமையான சூழ் நிலையில்— தமிழ் மக்கள் மத்தியில் மோதலைத் தவிர்க்கும் சூழ்நிலையில் ... தத்தை பயன்படுத்தி ... நாடு முழுவ... எடுத்து வருகின்றோம்

இந்த 5 நாட்களில் ஒரு ஆக்கபூர்வமான பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு எதிர்பார்த்திருக்கின்றோம்.

தமிழீழ விடுதலைப்புலிகளும் ஜனநாயக வழிக்கு வந்து தேர்தலில் ஈடுபடமுன் வருவார்களாயிருந்தால் எல்லாத் தமிழ்க் குழுக்களும், தமிழ்க்குழுக்களோடு சேர்ந்து செயல்பட ஆயத்தமாயருக்கும் முஸ்லிம் குழுக்களும் சேர்ந்த ஒரே வேட்பாளர் பட்டியலை ஒவ்வொரு மாவட்டத்திலும் சமர்ப்பிக்க வேண்டும் என்பது எங்களுடைய கருத்து.

#### ஒரே வேட்பாளர் பட்டியல்

அப்படியான ஒரு சூழ்நிலைக்கு விடுதலைப் புலிகள் முன்வருவார்களாயிருந்தால் அவர்களுக்கு ஒரு முக்கியமான, பிரதானமான இடம் கொடுக்கப்படுவதை நாம்ஆதரிப்போம். அதற்காக மற்ற இயக்கங்களோடு பேசி ஏற்பாடு செய்யவும் நாம் ஆயத்தமாக இருக்கின்றோம் என்பதை அவர்களுக்கு தெரியப்படுத்தி இருக்கிறோம்.

ஆனால் அவர்களுடைய பதில் என்ன என்பது இன்னும் தெரியாத சூழ்நிலையில் நாம் தொடர்ந்தும் அந்த நோக்கத்துக்காக உழைத்துக் கொண்டிருக்கிறோம்.

கஷ்டப்பட்டு, இனத்துக்காகப் போராடிய இளைஞர்கள் ஒரு முக்கிய பங்குவகிக்கின்ற சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்பதையே ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வற்புறுத்தி வருகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் எப்படி நடக்கப் போகிறார்கள், எங்கள் மக்கள் பட்ட துன்பம் போதும், ... இரத்தம் போதும் ... மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இக்கால சட்டத்தில் கிடைத்ததை உறுதிப்படுத்தி, கைக்கெட்டியது வாய்க்கெட்டாது போகாதவகையில் இதை பாதுகாக்க இந்திய அரசின் உதவியோடு நல்லெண்ணத்தோடு எமது மக்களுக்கு ஒரு வாழ்வைப் பெற்றுக் கொடுக்க அவர்கள் முன்வருவார்கள் என்றே நாம் எதிர் பார்த்துக் காத்து இருக்கின்றோம்.

அவர்களுடைய முடிவில் அதிகம் தங்கியிருக்கின்றது என்பது உண்மை.

இப்படி திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார். (இ - எ)

#### அபிவிருத்திச்சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப் 18

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்கிழமை நடைபெறும்.

இச்கூட்டத்தில் அடுத்த ஆண்டுக்கான புதிய நிர்வாகக்குழு தெரிவு செய்யப்படும். (ச)

யாழ்ப்பாணத்தில் புற்று நோய்க்கு

## கதிர்வீச்சு நிபுணர்கள் இல்லாததால் சத்திரசிகிச்சை நிபுணர்களால் சிகிச்சை

யாழ்ப்பாணம், செப் 18

தெல்லிப்பளை புற்று நோய் சிகிச்சைப்பிரிவில் கதிர்வீச்சு சிகிச்சை நிபுணர்கள் இல்லாததால் சத்திர சிகிச்சை நிபுணர்களினாலேயே சிகிச்சை அளிக்கப்படுகிறது.

வடபிராந்திய புற்றுநோய்ச் சங்கத்தலைவர் டாக்டர் எம். ஜெகநாதன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 27 ஆம் திகதி சஞ்சீவியிலும் 29 ஆம் திகதி உதயனிலும் புற்றுநோய்ச் சிகிச்சைக்கு யாழ்பாணத்தில் சத்திரசிகிச்சை நிபுணர்கள் இல்லை என்ற சாரப்பட செய்திகள் வெளிவந்தன

இச் செய்திகள் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே டாக்டர் ஜெகநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் புற்றுநோய்ச் சிகிச்சை நிபுணர்கள் இருக்கிறார்கள். கதிர்வீச்சு சிகிச்சை நிபுணர்கள்தான் இல்லை என்று அவர் கூறினார். (இ)

#### வைரவர் ஆலய பரிபாலன சபை

யாழ்ப்பாணம், செப்18

கொக்குவில் கிழக்கு - கோணாவளை அருள்மிகு வைரவர் ஆலயப் பரிபாலன சபைப்பொதுக்கூட்டம் இன்று 18 ஆம் திகதி 3மணியளவில் மேற்படி ஆலய மண்டபத்தில் நடைபெறும். (இ)

#### சனசமூக நிலைய ஒன்றியக்கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.18

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் ஆட்சிக்குழுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணி அளவில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க சனசமூக நிலைய மண்டபத்தில நடைபெற இருக்கும் இக்கூட்டத்தில் சனசமூக நிலையங்களின் செயற்பாடுகள், புதிய நடவடிக்கைகள் பற்றிய விடயங்கள் பல ஆராயப்படவிருக்கின்றன. (இ-ச)

# வடமத்திய மாகாணத்துடன் வெலிஓயாவை இணைக்க முயற்சி!

## முல்லைத்தீவுப் கச்சேரிக்கு பணிப்புரை

யாழ்ப்பாணம், செப் 18

வெலிஓயாவை ஒரு புது மாவட்டமாக அமைத்து அதனை வடமத்திய மாகாணத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாக மிக நம்பகரமான வட்டாரங்கள் மூலம் அறிய வருகிறது.

இது சம்பந்தமான பணிப்புரைகள் முல்லைத்தீவு கச்சேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

மகாவலி 'எல்' திட்டப் பிரிவு என்றழைக்கப்படும் வெலி ஓயாத் திட்டம் சுமார் 45 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட விஸ்தீரணமான காணியை உள்ளடக்கியிருக்கிறது.

இந்தத் திட்டதின் கீழ் 43 தமிழ் கிராமங்கள பறிபோயிருக்கின்றன.

தற்போது இந்தத் திட்டத்தில் சுமார் ஐயாயிரம் சிங்களவர் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டிருப்பதாக அறிய வருகிறது

அத்துடன் மேலும் பத்தாயிரம் குடும்பங்களை குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

அரசாங்கம் உட்பட உள்நாட்டு ஸ்தாபனங்களும் வெளிநாட்டு ஸ்தாபனங்களும் மற்றும் வெளிநாட்டு கடன் வழங்கும் ஸ்தாபனங்களும் இந்தத் திட்டத்துக்காக பெரும் தொகையான பணத்தைச் செலவிட்டுள்ளன.

வங்கிகள், பாதைகள் ஆஸ்பத்திரிகள், சந்தைகள், குடிதண்ணீர் வசதி போன்ற நவீன வசதிகள் இந்தத் திட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன் அங்கு குடியமர்த்தப் பட்டுள்ள ஒவ்வொரு குடும்பங்களுக்கும் அரசாங்கம் மாதாந்தம் 800 ரூபா பெறுமதியான பொருட்களை வழங்கி வருகிறது. மற்றும் பொதுஸ்தாபனங்கள் ஒவ்வொரு குடும்பத்துக்கும் மாதாந்தம் 400 ரூபா முதல் 800 ரூபா வரை பெறுமதியான பொருள்களை வழங்கிவருகிறது.

(ஒ-எ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சேட்டிங்ஸ் ★ சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

# உதயன்

18 - 09 - 1988 ஞாயிற்றுக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
★ மணிப்புரி
★ காஞ்சிபுர ★ பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை, :-: யாழ்நகர்.

## பேச்சுக்கு வருமாறு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
பட்டிருக்கிறது.

முதலாவதாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டாவதாக— தமிழ் மொழிக்கு உரிய சட்ட அந்தஸ்தைப் பெற்றுக் கொடுக்கும் சட்ட மூலம் தயாராகி விட்டது. வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தல் வாக்களிப்பிற்கு முன்னர் அது உரிய சட்ட அந்தஸ்தைப் பெறும் என்பதற்குநான் உறுதியளிக்கிறேன்.

மூன்றாவதாக — குடியேற்றம். இந்தப் பிரச்சினையின் உண்மை நிலையை நான் அறிவேன். ஆனால் இலங்கை அரசு தமிழர் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றம் நடைபெறவில்லை என மறுக்கிறது. இதுபற்றித் தீர்க்கமாக முடிவு எடுப்பதற்கு ஒரு பக்கத்தில் இலங்கை அரசு இருக்கும்போது மறுபக்கத்தில் ஈழத்தமிழர்களின் மக்கள் பிரதிநிதிகள் இருக்க வேண்டியது அவசியம். ஆகவே ஒழுங்காகத் தெரிவு செய்யப்பட்ட ஈழத்தமிழர் பிரதிநிதிகள் மூலமே இக்குடியேற்றப் பிரச்சினைக்கு நாம் நிரந்தரத்தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும். அப்படியான தெரிவு நடைபெற்று முடிந்து விட்டால் எப்படியும் நாம் சிங்களக்குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்திவிடலாம்.

நான்காவதாக—தடுப்புக்காவலில் உள்ளோர் பற்றிய விடயம். அவர்களும் விரைவில் விடுதலை செய்யப்படுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறேன்.

ஆகவே இந்த நிலையில் ஈழத் தமிழருக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என இந்தியா மனப்பூர்வமாக விரும்புகிறது.

இந்த உண்மை நிலையைக் கருத்திற் கொண்டு விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை நடத்த முன்வரவேண்டும் என நான் கோரிக்கைவிடுக்கிறேன்.

இனிமேலும் கிட்டுவுடன் பேசிக்கொண்டிருப்பதற்கு நாம்தயாரில்லை. பேசுவதாயின் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடன் தான் பேசுவோம்.

அப்படியான ஒரு பேச்சுவார்த்தைக்குவிடுதலைப் புலிகள் முன்வருவார்களேயானால் அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பும் ஒழுங்கும் வசதியும் செய்து கொடுக்கப்படும் என நான் உறுதியளிக்கிறேன் –என்றார்.

விடுதலைப் புலிகளைத் தனிமைப் படுத்தி தேர்தல் நடத்துவதை மக்கள் விரும்பவில்லை என்ற கருத்தைப் பிரசைகள் குழுப் பிரமுகர்கள் திரு. டிக்ஸிற்றிடம் தெரிவித்தனர்.

அவர்களில் கலந்து கொள்வதற்கு இந்தியா மனப்பூர்வமான - உண்மையான முயற்சிகளை மேற்கொள்ளத் தயங்காது. இந்தியத் தரப்பில் மட்டும் விட்டுக் கொடுக்கும் தன்மை இருந்தால் போதாது விடுதலைப் புலிகள் தரப்பிலும் அந்தத் தன்மை இருக்க வேண்டும் என்று திரு. டிக்ஸிற் குறிப்பிட்டார். (அ-உ)

ஸ்ரீராம ஜெயம்

## பூஜ்யஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் ப்ருந்தாவன பிரவேச விழா



விழா 15-9-88 முதல் 19-9-88 வரை 159A, கோயில் வீதி, நல்லூரில் நடைபெறுகிறது.
அனைவரும் வருக. (6628)

## புன்னாலைக்கட்டுவனில் சூட்டுக்கு இலக்கான இருவர்

யாழ்ப்பாணம், செப் 18

நேற்று யாழ் போதனா வைத்தியசாலையில் இருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டனர்.

தங்கராசா [பண்டத்தரிப்பு], எஸ். நவரத்தினம் [புன்னாலைக்கட்டுவன்] ஆகிய இருவருமே துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

இவர்களில் தங்கராசா பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இந்தச் சூட்டுச் சம்பவம் புன்னாலைக்கட்டுவன் இராணுவமுகாம் சென்றிக்கு 20 யார் தொலைவில் நேற்று நண்பகல் ஒன்றரை மணியளவில் நடைபெற்றதாக அறிய வந்தது.

சூட்டுக் காயத்துடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் திரு எஸ் நவரத்தினம் தெரிவித்ததாவது:

நானும் எனது சகாவான தங்கராசாவும் எனது மோட்டார்சைக்கிளில் புன்னாலைக்கட்டுவன் இராணுவ முகாம் சென்றியைத் தாண்டி வந்துகொண்டிருந்தபோது திடீரென ஏதோ வெடித்த சத்தம் கேட்டது.

எனது மோட்டார் சைக்கிள் டயர் வெடித்துவிட்டதோ எனநினைத்து மோட்டார் சைக்கிளைவிட்டு உடனே இறங்கினேன்.

அப்போதுதான் எனதும் தங்கராசாவினதும் உடல் முழுவதும் இரத்தத்தால் நனைந்திருப்பதைக் கண்டு அது துப்பாக்கிச்சூடுஎன உணர்ந்தேன்

முகாமைக் கடந்து வந்தபோது சூடு பின்பக்கமாகவே விழுந்தது. ஆனால் யார்சுட்டது என எமக்குத் தெரியாது என்றார். (அ-9)

## கொழும்புக்கு பஸ்சேவை

யாழ்ப்பாணம், செப். 18

கடந்த சில தினங்களாக தடைப்பட்டிருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில், காரைநகர் சாலைகளின் கொழும்பு பஸ்சேவை இன்றுமுதல் மீண்டும் ஆரம்பமாகும்.

இதற்கான ஆசனப் பதிவுகள் நேற்று ஏற்றுக் கொள்ளப்பட்டன. (ஓ-9)

## ஈ. வெ. ராவின் பிறந்த தினம்

பெரியார் ஈ.வெ.ராவின் 110 ஆவது பிறந்த தினவிழா நேற்று சென்னையில் கொண்டாடப்பட்டது. (ஓ-எ)

## புலிகள்-அமைதி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வவுனியா சென்ற திரு. டிக்ஸிற் அங்குள்ள பிரசைகள் குழுக்கள் பிரதிநிதிகள், மற்றும் பிரமுகர்களைச் சந்தித்துப் பேசினார்.

கிளிநொச்சிப் பிரசைகள் குழுப் பிரதிநிதிகளும் வவுனியாவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

மாலையில் திரும்பவும் யாழ்ப்பாணம் வந்த இந்தியத் தூதுவர் முற்பகலில் சந்திக்காத ஏனைய பிரசைகள் குழுப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

வவுனியாவில் நடந்த சந்திப்பின்போது, விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளை வவுனியாவில் சந்திக்க உதவுவதாக பிரசைகள் குழு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. (அ-10)

## யுத்த நிறுத்..,

(1ம் பக்கத் தொடர்ச்சி)
குறித்து மாலையில் (நேற்று மாலையில்) விடுதலைப் புலிகளிடமிருந்து கிடைக்கும் பதிலைப் பொறுத்தே முடிவு செய்யப்படும் என்றும் திரு. டிக்ஸிற் சொன்னார்.

அந்தப் பதில் ஆக்கபூர்வமானதாக இருந்தால் நிச்சயமாக யுத்த நிறுத்தம் நீடிக்கப்படும் என்றார் அவர்.

''யுத்த நிறுத்த மீறல் நடவடிக்கைகளில் தாம் ஈடுபடப் போவதில்லை என விடுதலைப் புலிகள் தெரிவித்திருப்பதாக எமக்கு அறியவருகிறது —ஆகவேஇதனைப் பயன்படுத்தி யுத்த நிறுத்தத்தை மேலும் நீடிக்க வேண்டும் எனப் பலரும் சந்திப்பின்போது வலியுறுத்தினர். (அ-உ-10)

## இந்தியத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
பத்திரிகையாளருக்கு வெளியிட திரு. டிக்ஸிற் மறுத்துவிட்டார்.

''எந்தவித முன்னேற்பாடுகளுமின்றிதிடீரென யுத்த நிறுத்தத்தை அறிவித்தால் யார், என்ன நடவடிக்கைகளை எடுக்க முடியும்?'' எனக் கேட்கப்பட்டபோதே திரு. டிக்ஸிற் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்தக் கடிதத்தில் ஆயுதங்களை ஒப்படைத்தல், இலங்கை–இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளுதல், ஜனநாயக வழிக்குத் திரும்புதல் ஆகியவை குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டதாக அவர் மேலும் சொன்னார். (அ-உ-10)

## கால,...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கலந்துரையாடி முக்கிய முடிவுகளை எடுக்க முடியாது.

தீவிர ஆலோசனை செய்த பின்னரே முடிவுகளை வெளிப்படுத்த முடியும். எனவே யுத்த நிறுத்தம் நீடிக்கப்பட வேண்டும் என்று திரு. பாலகுமாரன் வலியுறுத்தினார் என அறிய வந்தது.

இதேவேளை கொழும்பு வெலிக்கடை, மகசின் சிறைச்சாலைகளில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது உறுப்பினர்களின் விடுதலை குறித்தும் திரு பாலகுமாரன் தூதுவர் திரு. டிக்ஸிற்றிடம் உரையாடினார். (ஒ-10)

## இந்திய எதிர்க்கட்சிகள் சொல்வதும் அதுதான்!

சென்னை, செப். 18


★ இலங்கைப் பிரச்சினையில் இப்போதைய அமைதிப்படையின் யுத்த நிறுத்தம் நிரந்தரமாக்கப்பட வேண்டும்.

★ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்திப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்.

இந்தியாவின் ஏழு எதிர்க்கட்சிகள் சேர்ந்து புதிதாக அமைத்துள்ள தேசிய மக்கள் முன்னணி நேற்று சென்னையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அதன் பின்னர் வெளியிடப்பட்ட தீர்மானங்களில் மேற்கண்ட விடயங்களும் அடங்கி இருந்தன. (ஒ-எ)

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திரு. இராஜலிங்கம் குணராசா

19-8-1988இல் இறைவனடி சேர்ந்த எங்கள் குல தெய்வம் திரு. இராஜலிங்கம் குணராசாவின் வீட்டுக்கிரியைகளில் கலந்து இன்று நடைபெறும் மதியபோசனத்தில் பங்குபற்றி அவரின் ஆத்மா சாந்தி அடைவதற்கு அஞ்சலி செய்யும்வண்ணம் உறவினர்களையும், நண்பர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

இருபாலை வீதி,
கோண்டாவில்.
அன்புள்ள
மனைவியும், பிள்ளைகளும்
(6687)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சி. யோகவனம்

(களஞ்சியப் பொறுப்பாளர்
சீமேந்துக் கூட்டுத்தாபனம்)

தோற்றம்: 25 - 10 - 1941
மறைவு: 19 - 08 - 1988

பாசத்துடன் எமைப்பாதுகாத்து எமக்காகவே வாழ்ந்த எமது அன்புத் தெய்வமே! உமது ஆத்மா சாந்தியடைய இறையை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

குறிப்பு:- 18-09-1988 ஞாயிறன்று எமதில்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியங்களில் கலந்து கொள்ள வேண்டுகின்றோம்.

— குடும்பத்தினர்

வீமன்காமம்,
பளை, தெல்லிப்பளை.
(6560)

## மாகாணசபை - - -

(1ம் மக்கத் தொடர்ச்சி)
டன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் தேர்தல் பற்றிய அறிவிப்பு வெளியாவது அந்தச் சூழ்நிலையைக் குழப்பிவிடும் என நேற்றைய சந்திப்பின்போது பிரசைகள் குழுப் பிரமுகர்கள் சிலர் கருத்து வெளியிட்டனர்.

அதற்கு இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற் பதிலளித்தார். அவர் கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கள் ஆயுதங்களை ஒப்படைத்து இலங்கை, இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தால் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கச் செய்வதற்கு நான் முயற்சி எடுப்பேன்.

இலங்கையின் தேர்தல் ஆணையாளர் அங்கீகரித்தால் தான் ஓர் இயக்கம் அரசியற் கட்சியாக இருக்க முடியும் என நம்பவில்லை. மக்கள் அங்கீகாரம் தான் முக்கியமானது.

ஆகவே விடுதலைப் புலிகள் தேர்தல் ஆணையாளரின் அங்கீகாரத்தை விட தமது மக்களின் அங்கீகாரத்தைப் பெறவே முயலவேண்டும்.

அதனால் தேர்தலில் தமது பங்கு பற்றிய சந்தேகங்களை ஒருபுறம் வைத்து விட்டு விடுதலைப் புலிகள் எம்முடன் பேச்சுவார்த்தை நடத்த வரலாம். - இப்படி அவர் மேலும் சொன்னார். (அ-உ)

## மரண அறிவித்தல்கள்

### திரு. ச. குலோத்துங்கமுதலியார்

இளைப்பாறிய ஆசிரியர் - ஊரெழு

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த ச. குலோத்துங்க முதலியார் அவர்கள் காலமானார். இவர் காலஞ்சென்ற அன்னலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு. நல்லையா – தாவடி என்பவரின் சகோதரரும் திரு. Dr. ஜெயராசா (அரசினர் வைத்தியசாலை, குளியாப்பிட்டி), ஜெயராணி, தவராணி, குலராசா (T. A. நீர்ப்பாசன இலாகா, கிளிநொச்சி), ஸ்கந்தராசா (T. O. பெருந்தெருக்கள் அதிகாரசபை, சிலாபம்), பரமராஜா (பணிப்பாளர்சபை உறுப்பினர், வலி. கிழ. (தெ. ப.) ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சரோஜினி. செல்வரத்தினம் (R. D. O. நெடுந்தீவு, தர்மினி (வலி வடக்கு பிரதேசசபை உப அலுவலகம், மல்லாகம்), கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், கீதாஜினி, சபேசன், ஜெயக்குமார், செல்வகுமார். சோபிகா, விபுலாசன், மோபிலாசினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் திங்கட்கிழமை (19-09-88) காலை 10-00 மணியளவில் ஊரெழு பொக்கணை மயானத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.
தகவல்
கு. பரமராஜா (பரம்)
(6688)

### லோறன்ஸ் ஷேனிஜெயருபன்

லோறன்ஸ் ஷேனிஜெயருபன் [Shakkene Trading Co] புதன்கிழமை 14-09-88 அன்று பலாங்கொடையில் அகால மரணமானார். இவர் Ben லோறன்ஸ் [Saudi-Arabia], டல்சி லோறன்ஸ் [ஆசிரியை] அவர்களின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற J.P. நாகலிங்கத்தினதும், கிறேஸ் ஜெயமணியினதும் மூத்த பேரனும், ஷெறின், மொறின், டல்றின் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதி ஆராதனை (19 - 09 - 88) திங்கட்கிழமை அன்று மாலை 3.30 மணியளவில் மானிப்பாயில் உள்ள அவர்களின் இல்லத்தில் நடைபெற்று மானிப்பாய் C. S. I. சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கொமனி தருமராசா.
(பெரியப்பா)
(6564)

### வண. சாம் தம்பு

15 - 09 - 1988 உதயனில் வெளியான மரண அறிவித்தலின் படி போதகர் அவர்களின் நல்லடக்க ஆராதனை 19 - 09 - 1988 திங்கட்கிழமைகாலை 9 மணிக்கு நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம். மாற்றங்களினால் ஏற்படக் கூடிய அசௌகரியங்களுக்கு வருந்துகின்றோம்.

போதகர் அவர்களின்
குடும்பத்தினர்.
(6563)

MACK TRAVEL AIR TRAVEL

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ... நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 18 - 09 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Sunday 18th September 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org